Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 60 | செவ்வாய்க்கிழமை | தை 13 ஆம் நாள் 26 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# சர்வதேச விசாரணையை தவிர்க்கவே ஆணைக்குழு

- சர்வதேசத்தை ஏமாற்ற கோத்தாபய அரசு முயற்சி
- முன்னாள் அமைச்சர் மங்கள கடும் கண்டனம்

கொழும்பு, ஜனவரி 26

அரசின் கேவலமான நடவடிக்கைகளால் இலங்கை இந்தமுறை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வுள்ளது. அதைச் சமாளிக்கவே கோத்தாபய அரசு புதிய ஆணைக்குழுவை நிய மித்துள்ளது. இது சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கை என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். 19



## கொரோனா தடுப்பூசிக்கான முன்னுரிமை பட்டியல் இறுதி

### இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஜன.26

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணிகள் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக் கப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ள முன்னுரிமைப் பட்டியல் இறுதி 19



## கோத்தாபய அரசின் மீது அமைச்சருக்கே வெறுப்பு

கொழும்பு, ஜன.26

சாதாரண மக்கள் மாத்திரமல்ல அமைச்சரான நானும் இந்த அரசு மீது கடும் வெறுப்பில் இருந்து வருகின்றேன் என்று மின்வலு அமைச் சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை, தேவேந்திரமுனையில் நேற்று நடை பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மகளிர் அணியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். 19

## வேலணை பிரதேச செயலருக்கு திடீரென இடமாற்றல் உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜன.26

வேலணை பிரதேச செயலாளர் சோதிநாதன் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் வவு னியா செட்டிக்குளத்துக்கு இடமாற றப்பட்டுள்ள நிலையில், வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலாளரா கக் கடமையாற்றிய சிவகரன் வேலணை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். 19

## ஐ.நா. சபையின் அறிக்கை அடுத்த வாரம் பகிரங்கம்!

கொழும்பு, ஜன.26



இலங்கை தொடர் பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை அடுத்த வாரம் பகிரங்கமாக வெளியிடப்படவுள் ளது. பிரிட்டனின் அணுகுமுறைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிவிக்கப்படும். இவ்வாறு இலங்கைக் கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் தெரிவித் துள்ளார். ருவீற்றரில் அவர் பதிவிட் டுள்ள பதி 19

## வயலுக்கு சென்றவர் கரடி தாக்கி காயம்!

முல்லைத்தீவு, ஜன.26

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் வயல் வேலைக்கு சென்ற விவசாயி கரடியால் தாக் கப்பட்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த அவர் முல்லைத் தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கோம்பாவில் புதுக்குடியிரு ப்பைச் சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே தாக்குத லுக்கு இலக்காகியு 19

## கொரோனா உயிரிழப்பு 287

கொழும்பு, ஜன.26

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் நால்வர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற் றிரவு அறிவித்துள்ளார்.

பேருவளை, தெரனியா கலை, வரகாகொட மற்றும் கொழும்பு 8 ஆகிய பகுதி களை சேர்ந்தவர்களே இவ் வாறு உயிரிழ 19

## வடக்கில் நேற்று 8 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன.26

வடக்கில் நேற்று 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் நால்வர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் வாகனச் சாரதிகளுக்கு, எழுதுமட்டுவாழில் மேற்கொள் ளப்படும்பி.சி.ஆர். பரிசோதனை கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு ள்ளனர். இவர்களில் இருவர் மன்னாரைச் 19

## வீதியால் சென்றவரின் தங்கச்சங்கிலி அறுப்பு

வவுனியா, ஜன.26

வீதியால் பயணித்த பெண் ஒருவரின் 4 பவுண் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வவுனியா, கோவில்குளம் பகுதியில் நேற்று மாலை நடந்துள்ளது. வவுனியா நகரில் பணியாற் றும் பெண் ஒருவர், பணி முடிந்து வீடு சென் 19

## விபத்தில் சிக்கிய முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன.26

விபத்தில் சிக்கி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சிகிச்சை பெற்றுவந்த முதியவர், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை, தும்ப ளையைச் சேர்ந்த சந்திரசேக ரம்பிள்ளை சோதிலிங்கம் (வயது-67) என்பவரே உயிரி ழந்துள்ளார். 19

## மூதாட்டி விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

வல்வெட்டித்துத்துறை, ஊறணி வைத்தியசாலைக்கு முன்பாக நடந்த வீதிவிபத்தில் காயமடைந்த மூதாட்டி சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். உடுப்பிட்டிவீதி, தொண்டைமா னாறைச்சேர்ந்த 19

## புதன்கிழமை கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாட டைக் கண்டித்து எதிர்வரும் புதன்கிழமை யாழ் மாவட்டத் தில் கவனயீர்ப்புப் 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)'

### போராட்டத்தின் எதிரொலி

# தமிழ் மக்களுடைய காணிகளை கடற்படை சுவீகரிக்க முடியாது!

## வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஜன. 26**

**கடற்படையால் சுவீகரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டு, அளவீடுகள் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்ட வேலணைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொதுமக்களுடைய காணிகள் அனைத்தும், அவர்களுக்கே வழங்கப்படவேண்டும் என்று வேலணைப் பிரதேச செயலகத்தில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வேலணைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மண்டைதீவு, மண்கும்பான், புங்குடுதீவு போன்ற பகுதிகளில் உள்ள 79 குடும்பங்களுக்குச் சொந்தமான 50க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பை கடற்படையினர் சுவீகரிக்கக் கடும் முயற்சிகளை முன்னெடுத்தனர். எனினும் மக்கள் தமது காணிகளை கடற்படையினக்கு வழங்கப்போவதில்லை என்று தீர்க்கமாகவே கூறினர். தமது காணிகளை சுவீகரிப்பதை எதிர்த்து போராட்டங்களையும் மேற்கொண்டனர். அரசுக்கு இது தொடர்பில் மனுக்களையும் கையளித்தனர். இவ்வாறான நிலையில் வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அந்தக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதேச செலயகத்தின் வாயிலில் ஒன்று கூடிய காணி உரிமையாளர்கள் காணி சுவீகரிப்புக்கு எதிராகக் கோசங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் பொன் மாஸ்ரர், காணி உரிமையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது அங்கு இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் வந்தார். வாகனத்தில் இருந்து இறங்கி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பேசினார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வருமாறும் அங்கு இது தொடர்பில் பேசுவோம் என்றும் அவர் தெரிவித்தார். எனினும் அதற்கு மறுத்த கஜேந்திரகுமார் இங்கேயே தொடர்ந்தும் போராடுகிறோம் என்றார்.

இதையடுத்து குறித்த போராட்டம் தொடர்பில், பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. அந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், செ.கஜேந்திரன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அந்தக் காணிகளை கடற்படையோ, அல்லது இராணுவமோ அல்லது அரச தரப்போ சுவீகரிக்க முடியாது என்று தெரிவித்தனர்.

### பிரேரணை நிறைவேற்றம்

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் கூட்டத்துக்கு வந்தார். அவர் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடைய பிரச்சினைகளை இணைத்தலைவருக்கு தெரிவித்தார். மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் கூட்டத்துக்குள் வந்தனர். அவர்களிடம் இணைத்தலைவர் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். மக்களும் கண்ணீருடன் தங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்தனர். தொடர்ந்து மக்களுடைய காணிகள் அனைத்தும் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம், காணி அமைச்சர் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி, உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

### ஜாம்பவான்களும் போராட்டத்தில்

இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், "இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மற்றுமொரு வழியும் உள்ளது. காணிப் பிரச்சினை தொடர்பில் உச்ச நீதிமன்றம் வரை வழக்குத் தொடர்ந்து காணியை மீட்க முடியும். இங்கு நிறைய ஜாம்பவான்கள் உள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணிகளாக அந்த ஜாம்பவான்கள் உள்ளனர். ஏன் இந்தப் போராட்டத்திலும் ஜாம்பவான்கள் கலந்துகொண்டுள்ளனர். அவர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர்ந்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம் "என்றார்.

### அரசைவிட்டுக்கொடுக்காத அங்கஜன்

காணி அபகரிப்புத் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றபோது, அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும், இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் " இந்த அரசில் மட்டும் இந்தக் காணி அபகரிப்பு இடம்பெறவில்லை. இது கடந்த நல்லாட்சி அரசிலும் இடம்பெற்றது. அதனுடைய தொடர்ச்சியாகவே இந்த அரசில் இந்த சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன" என்றார்.

(ம,ப,ரி-4)

### கஜேந்திரன் எம்.பிக்கு 'பொக்ஸ்'

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கூட்டத்துக்கு அழைத்துக் கலந்துரையாடப்பட்டது. நிறைவில் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்பது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கலந்துகொண்டார். கூட்டம் ஆரம்பமானபோது, மக்களுடைய போராட்டத்துக்கு பதில் கூறிவிட்டு கூட்டத்தை ஆரம்பிக்குமாறு இணைத்தலைவரிடம் கஜேந்திரன் எம்.பி வலியுறுத்தினார். பதிலளித்த இணைத்தலைவர், "அவர்களை அழைத்தேன் அவர்கள் போராடுவதாகவே தெரிவித்தனர் இந்தக் கூட்டத்தின் நிறைவில் அவர்களிடம் சென்று பேசுகிறேன்" என்றார். எனினும் விடாத கஜேந்திரன் எம்.பி "போராட்டத்தில் வயதானவர்களும் கலந்துகொண்டுள்ளதால், முடிவை அங்கு சென்று அறிவித்துவிட்டு வந்து கூட்டத்தை ஆரம்பியுங்கள்" என்றார். சம்மதிக்காத இணைத்தலைவர் "கூட்டத்தை ஆரம்பிப்போம், போராட்டம் செய்பவர்களை கூட்டத்துக்கு அழைத்துள்ளேன். அவர்கள் வரும்போது அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசலாம் "என்று கூட்டத்தை ஆரம்பித்தார். அப்போதும் கஜேந்திரன் எம்.பி விடுவதாக இல்லை. இதன்போது கூட்டத்தில் எழுந்த ஐக்கியதேசியக் கட்சியின் வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் " இந்தக் கூட்டத்தில் அரசியல் செய்யவேண்டாம் "என்று கஜேந்திரன் எம்.பியின் குரலை அடக்க முயன்றார். இதன்போது அங்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் கஜேந்திரன் எம்.பி "அரசியல் செய்கிறார் "என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். எனினும் கஜேந்திரன் எம்.பி தனது நிலைப்பாட்டை விடாது தொடர்ந்தார்.

---

## பெண்கள் மீது தாக்குதல்; அரச அலுவலர்கள் கைது

கொழும்பு, ஜன. 26

குடும்பத் தலைவன் வெளியே சென்றிருந்த போது வீட்டில் தனித்து இருந்த பெண்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் அரச உத்தியோகத்தர்களான சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும் யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

பண்ணாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேற்படி மூன்று பெண்களும் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மதில் கட்டுவது தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-20)

---

## பிள்ளையைக் கொன்று தாய் தற்கொலை

ஹட்டன், ஜன. 26

தனது நான்கு வயது மகனை கொலை செய்த தாய், தானும் தற்கொலை செய்துள்ளார். குறித்த சம்பவம் பங்களாவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் குழந்தையின் கழுத்தை சேலையால் நெரித்துக் கொன்ற 24 வயதேயான தாய், அதே சேலையில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி5-இ)

---

## காதி நீதிமன்றம் தொடர்பில் புதிய அரசமைப்பில் மாற்றம்

திருகோணமலை, ஜன. 26

காதி நீதிமன்றங்கள் தொடர்பில் புதிய அரசமைப்பில் நிச்சயமாக மாற்றம் செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

காதி நீதிமன்றங்களில் வெற்றிடங்களுக்கு காதி நீதிபதிகளை நியமிக்க விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் பெபிலியான சுனேத்ரா தேவி விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

காதி நீதிமன்றங்கள் தொடர்பாக மீண்டும் பேசப்படுகிறது. ஒரு நாடு ஒரு சட்டம் என்ற அரசின் கொள்கைக்கு அமைய தனித்தனி நீதி மன்றங்கள் இருக்க முடியாது. காதி நீதிமன்றங்கள் குறித்து உடனடியாக முடிவு எடுக்க வேண்டியுள்ளது என்றார். (மஇ)

---

## இறந்தவர்களை நினைவுகூர கனடாவில் நினைவுச்சின்னம்

ஒட்டாவா, ஜன. 26

இலங்கையின் உள்நாட்டுப் போரில் உயிரிழந்த தமிழர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்கு கனேடிய பிராம்ப்டனின் நகர முதல்வர் பெட்ரிக் பிரவுன் உறுதியளித்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் தகர்க்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடந்த வாரம் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை பிராம்ப்டன் நகர சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இதையடுத்தே நினைவுச் சின்னம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம)

## விவசாயக் காணியை மீட்பதற்குப் போராட்டம்

மன்னார், ஜன.26

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 'கோவில் மோட்டை' பகுதியில், பாரம்பரியமாக விவசாயம் மேற்கொள்ளப்பட்ட காணியை, மத ஸ்தாபனமொன்றுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மடு பிரதேச செயலகத்துக்கு முன்பாக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் கடந்த 30 வருடங்களாக கோவில் மோட்டைப் பகுதியில் விவசாயச் செய்கைகளை மேற்கொள்ளும் 27 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலரைத் தொடர்புகொண்டபோது,

இந்தக் காணி தொடர்பான பிணக்கு, பல வருடங்களாக நீடித்து வருகின்றது. மக்களுடனான ஆலோசனையின் பின்னர், அவர்களின் முன்மொழிவின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. மக்களின் எதிர்ப்பு நிலை காரணமாக கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை, தற்காலிகமாக நிறுத்தி, உயர் மட்ட முடிவுக்காக அனுப்பப்படும். என்றார். (க-56)

### ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தை

# தரம் உயர்த்தக் கோரி பெற்றோர் கவனவீர்ப்பு

**முல்லைத்தீவு,ஜன.26**

**முல்லைத்தீவு, துனுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துமாறு கோரி மாணவர்களின் பெற்றோர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த னர்.**



பாடசாலைக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டோர் கருத்து தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலுக்குள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் உள்வாங்கப்படவில்லை.

தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கான சகல தகுதிகளும் இருந்த போதும், எமது பாடசாலை குறித்த பட்டியலில் உள்வாங்கப்படாமைக்கான தெளிவுபடுத்தலை உரிய அதிகாரிகள் வழங்க வேண்டும்" என்றனர்.

இதேவேளை, போராட்டம் நடைபெறுவதற்கு முன்னதாகவே பாடசாலையின் இரண்டு வாயில்களுக்கும் முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு பாடசாலை வளாகத்துக்குள் பெற்றோர் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்த புதிய உத்திகள்!

கொழும்பு, ஜன.26

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய உத்திகள் குறித்து கவனம் செலுத்துவதற்கு இரு நாடுகளினதும் வெளிநாட்டு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பாக பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தை வாழ்த்துவதற்கு வெளிநாட்டு அமைச்சர் தியோடோரோ எல்.லோக்சின்னுக்கு இலங்கை வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கொண்ட தொலைபேசி உரையாடலொன்றின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பிலிப்பைன்ஸ் தூதரகம் அமைப்பது குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையே விமான சேவையைத் தொடங்குவது குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர். வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புக்களைப் பெறுவதிலான பிலிப்பைன்ஸின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும், கிடைக்கக்கூடிய வழிமுறைகளை அடையாளம் காணவும், இந்த முயற்சியில் இலங்கைக்கு உதவுவதற்கும் பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் ஒன்றிணைந்து பணியாற்றவும், இரு நாடுகளின் வர்த்தக மற்றும் தொழில்துறை சபைகளுக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான அதிக வாய்ப்புக்களை வழங்கவும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். (ம-இ)

## மன்னார் சட்டத்தரணிகள் ஒரு வாரம் புறக்கணிப்பு

மன்னார்,ஜன.26

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள், நீதிமன்ற வளாகத்துக்குள் நேற்றுச் சமூகமளித்த போதும், வழக்குகளுக்கு முன்னிலையாகவில்லை. இதனால் நேற்றைய வழக்குகள் யாவும் வேறு திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

புதிய வழக்குகளைத் தவிர, பழைய 91 வழக்குகள் நேற்று அழைக்கப்படவிருந்தன.

நண்பகல் 12.30 மணி வரை நீதிமன்றம் ஆரம்பிக்கப்படாத நிலையில், வழக்குகளுக்கு வருகை தந்தவர்கள் நீண்ட நேரம் காத்திருந்தனர். எனினும் வழமை போன்று சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு சமூகம் அளித்திருந்த போதும், நீதிமன்றில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் கூடியிருந்தனர். பின்னர் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியுடன் நீண்ட நேரமாகக் கலந்துரையாடினர். நண்பகல் 12.30 மணிக்குப் பின்பே சட்டத்தரணிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வழக்குகளுக்காக முன்னிலையாவதில்லை யெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. மன்னாரில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதால், சட்டத்தரணிகள் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை வரை நீதிமன்றச் செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தனர். மீண்டும் அதே நோக்குடன் தற்போது வழக்குகளில் முன்னிலையாவதைத் தவிர்த்துள்ளனர். (க-இ)

## புளியம்பொக்கணை பெருஞ்சாந்தி விழா

கிளிநொச்சி,ஜன.26

வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய, சப்த தள, பஞ்ச தள இராஜகோபுர மகா கும்பாபிசேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும். சப்த தள இராஜகோபுரம் ஸ்ரீ நாகேஸ்வரி சமேத நாகலிங்கேஸ்வருக்கும், பஞ்ச தள இராஜகோபுரம் நாகதம்பிரானுக்கும் கட்டி முடிக்கப்பட்டது. கலசங்கள் வைக்கப்பட்டு தொடர்ந்து மூன்று தினங்கள் பூசைகள் இடம்பெறும். தைப்பூசத்தன்று காலை 9.21 தொடக்கம் 11 மணி வரையான நேரத்தில் பஞ்சவர்ண இரண்டு இராஜ கோபுர கும்பாபிசேக நிகழ்வு இடம்பெறும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடியவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (க-21)

### அ.மி.த.க பாடசாலையில்

## திறன் வகுப்பறை நிர்மாணிப்பு

சாவகச்சேரி ஜன. 26

இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையில் திறன் வகுப்பறை மூன்று லட்சம் ரூபா செலவில் வரணி ஒன்றியத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

திறன் வகுப்பறைக்கான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு ஒன்றியப் பிரதிநிதிகளால் நேற்று பாடசாலை அதிபரிடம் வகுப்பறைக்கான திறப்பு கையளிக்கப்பட்டுள்ளது. (ரி5-9)

## போதைப்பொருள் சந்தேகநபரை கைதுசெய்ய இன்டர்போல் உதவி

கொழும்பு, ஜன.26

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் அதிகாரிகள் போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்கின் 14 ஆவது சந்தேகநபரான உதார சம்பத்தை இன்டர்போல் உதவியுடன் கைதுசெய்ய நீதிமன்றம் சிவப்பு அறிவித்தல் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு தலைமை நீதிவான் மொஹமட் மிஹெய்ல் நேற்றுக் காலை பிறப்பித்தார்.

சந்தேகநபர் போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியுடன் கைதுசெய்யவே நீதிமன்றம் இந்த சிவப்பு அறிவித்தலை பிறப்பித்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## அலங்கார உற்சவமும் தெய்வீகப் பேருரையும்

சங்கரத்தை,ஜன.26

சங்கரத்தை குளத்தடி அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

உற்சவ காலங்களில் "இந்துமதம் காட்டும் ஆன்மீகம்" எனும் தலைப்பில் கலாநிதி மதுரகவி.காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவுள்ளார். (ஐ)

## ஆனந்த குருகுலத்தில் சமஸ்கிருத நாள்வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன.26
சுன்னாகம் கந்தரோடை அருளாந் தப் பிள்ளையார் ஆலயத்தின், ஆனந்த குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கான சமஸ்கிருத நாள் வகுப்பு எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கல்வியைத் தொடர விரும்பும் அந்தண மாணவர்கள் 077 691 4236 என்ற தொலைபேசி எண்ணுடன் அல்லது சிவஸ்ரீ ப. ஜெயகுமாரக் குருக்கள், பொறுப்பாசிரியர், ஆனந்த குருகுலம், கந்தரோடை, சுன்னாகம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும் என குருகுல பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார். (ந)

## மிருசுவில் பகுதியில் பணம், நகை திருட்டு

கொடிகாமம், ஜன.26
மிருசுவில் வடக்கு மன்னன்குறிச்சி கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை நகை மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன.

வீட்டில் இருந்தவர்கள் திருமண வீடொன்றுக்குச் சென்றவேளை, இனந்தெரியாத நபர்களால் வீட்டுக் கதவு மற்றும் அலுமாரி என்பவை உடைக்கப்பட்டு சங்கிலி மற்றும் மோதிரம் உட்பட மூன்று பவுண் நகை மற்றும் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் என்பவை திருடப்பட்டுள்ளன. வீட்டு உரிமையாளர், தாம் வீடு திரும்பியபோது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருந்தது. அத்துடன் வீட்டினுள் இருந்த அலுமாரியும் உடைக்கப்பட்டு அங்கிருந்த மூன்று பவுண் நகையும் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள் என என கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-159)

## கிளி.மத்திய பஸ் நிலைய சீரமைப்பு பணி ஆரம்பம்

கிளிநொச்சி.ஜன.26
கடந்த சில ஆண்டுகளாக கைவிடப்பட்டிருந்த கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கட்டுமானப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் பஸ் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் வகையில் துரிதமாகச் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-214)



# குறைந்த விலையில் நெல் கொள்வனவு

### விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி,ஜன.26**
**நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபை நெல்லைக் கொள்வனவு செய்யாததால் குறைந்த விலையில் தனியாரிடம் நெல்லை விற்க வேண்டிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் உள்ளனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

காலபோக நெற் செய்கையின் அறுவடைகள் முடியும் நிலையில் உள்ளன. நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபை நெல் கொள்வனவில் இன்னும் ஈடுபடாத காரணத்தால் தனியார் வியாபாரிகளால் ஆரம்பத்தில் 3 ஆயிரத்து 600 ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்ட நெல், தற்போது 3 ஆயிரத்து 250 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுகிறது.

தற்போது அறுவடைக் காலத்திலும் மழை பெய்தமை, மாவட்டத்தில் போதிய களஞ்சிய வசதிகள் மற்றும் நெல் உலர விடும் தளங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் விவசாயிகள் நெல்லை உலர விடாமலே பச்சையாக விற்பனை செய்து வருகின்றனர்.

எனவே நெல்லை சந்தைப்படுத்தும் அதிகார சபை விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி2)



## துப்புரவுசெய்யப்பட்டது வலைப்பாடு கடற்கரை

கிளிநொச்சி. ஜன.26
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியால் வலைப்பாடு கடற்கரையை அண்டிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

30 இளைஞர், யுவதிகளின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் காலை இத் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது.

கடற்கரை சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்வு, அடுத்து வரும் நாள்களில் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ந-6)

## சிறை அதிகாரி இடைநீக்கம்!!

கொழும்பு. ஜன.26
சிறைக் கைதிக்கு தொலைபேசி வழங்கியமை தொடர்பில், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் அதிகாரி ஒருவரின் பணி, இடைநிறுத்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் கைதியொருவரிடமிருந்து மீட்கப்பட்ட தொலைபேசி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது கைதி தனக்கு சிறைச்சாலை அதிகாரியொருவரே தொலைபேசியை வழங்கியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியல் சிறைச்சாலையின் ஆணையாளரின் ஆலோசனைக்கமைய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ற-இ)



## கூட்டமாக இறக்கும் காகங்கள்

கிளிநொச்சி.ஜன.26
கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் காகங்கள் அதிக அளவில் இறந்து வருகின்றன என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமாக இறக்கும் காகங்கள் பிரதேசத்தில் ஆங்காங்கே வீழ்ந்து கிடக்கின்றன என்றும், காகங்கள் இவ்விதம் இறப்பதற்கான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களுக்கு முன் இறந்த காகம் ஒன்றின் வயிற்றுப் பகுதியில் 'லஞ்ச் சீற்' காணப்பட்டது எனவும் பொது மக்களால்

## இசை ஆராதனை

யாழ்ப்பாணம்.ஜன.26
யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்கள் நடத்தும் "சற்குரு தியாகராஜ சுவாமிகள் இசைஆராதனை" எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இந்து சமயப் பேரவையில் நடைபெறவுள்ளது. பேரவையின் தலைவர் ஈசான. சிவசக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்திய கொன்சியூலர் ச.பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## மகா கும்பாபிசேகம்

கொடிகாமம், ஜன.26
வரணி கறுக்காய் கந்தசாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் தைப்பூச நாளான எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.06 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை கர்மாரம்பமும், நாளை புதன் கிழமை எண்ணெய்க் காப்பும் இடம் பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# ராமர் பால ஆய்வுக்கு இந்திய அரசு ஒப்புதல்

கொழும்பு.ஜன.26

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 48 கிலோ மீற்றர் நீளமுள்ள ராமர் பாலத்தின் தோற்றம் தொடர்பில் ஆய்வை மேற்கொள்வதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இராமேஸ்வரத்துக்கும், தலை மன்னாருக்கும் இடையே ராமர் பாலம் அமைந்துள்ளது.

48 கிலோமீற்றர் நீளம் கொண்ட சுண்ணாம்புக் கற்களால் ஆன இந்தப் பாலம், பல மர்மங்களை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. ராமர் பாலம் எப்படி உருவானது என்பது தொடர்பில் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன.

இலங்கை அரசன் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்கச் சென்றபோது, கடலைக் கடந்து செல்வதற்காக இந்தப் பாலம் அமைக்கப்பட்டது என்றும், ராமருக்காக வானரப் படைகள் அந்தப் பாலத்தைக் கட்டினர் என்றும் புராணங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக ராமர் பாலத்தை இந்துக்கள் புனிதமாகக் கருதுகின்றனர்.

இந்துக்களின் அடையாளமாகவும், நம்பிக்கை சார்ந்த விடயமாகவும் இருப்பதால் ராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய பாரம்பரியச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று சுப்ரமணியன் சுவாமி உயர் நீதிமன்றில் கடந்த 2015 ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தமை குறிப்பிட த்தக்கது.

இந்த நிலையில் ராமர் பாலம் எப்போது உருவானது? எப்படி உருவானது? என்பது தொடர்பில் தொல்லியல் ஆய்வு நடத்த, இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் கீழ் உள்ள தொல்பொருளியல் தொடர்பான மத்திய ஆலோசனைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

(க-இ)

# வலி.மேற்கு பிரதேச சபை அமர்வில் இரண்டு உறுப்பினர்கள் வெளிநடப்பு!

## சபையின் செயற்பாடுகளில் அதிருப்தி

**யாழ்ப்பாணம், ஜன. 26**

**வலி.மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றபோது சபையின் செயற்பாடுகளில் அதிருப்தி தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். தே.ரஜீவன், சி.இதயகுமாரன் ஆகியோரே வெளிநடப்புச் செய்தவர்களாவர்.**

மேற்படி பிரதேச சபையின் 35ஆவது அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை உப தவிசாளர் வே.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது. தவிசாளரும் வழமையாக அமர்வில் பங்கேற்கும் சபைச் செயலாளரும் சுகவீனம் காரணமாக அமர்வுக்கு வருகை தரவில்லை.

அமர்வின் முதல் செயற்பாடாக கடந்த அமர்வின் அறிக்கை தொடர்பான விவாதத்தின்போது, அமர்வில் கலந்துரையாடப்படும் விடயங்கள் உரிய வகையில் அறிக்கையிடப்படுவதில்லை என உறுப்பினர் ரஜீவன் கருத்து முன்வைத்தார்.

சங்கானை பிரதம தபாலகத்துக்கு உரிய அளவுகளை மீறி வீதிப்பக்கம் முன்னோக்கியதாக மதில் அமைக்கப்படும் விடயம் கடந்த அமர்வில் பல உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டு இரு மணித்தியாலம் வரை விவாதிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அது தொடர்பாக ஒரு வசனம் கூட அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை எனவும் ரஜீவன் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக உறுப்பினர்களான ந.பொன்ராசா, ச.ஜெயந்தன், து.சுஜிந்தன், க.துளசி ஆகியோரும் கருத்து வெளியிட்டனர். அமர்வில் இடம்பெறும் விடயங்கள் அறிக்கையில் சேர்க்கப்படாத விடயம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது எனவும் சபை செயற்பாடுகள் தொடர்பாக பேணப்படவேண்டிய ஆவணமான அறிக்கையில் உள்ளதை உள்ளபடியே சேர்க்கப்படாமை ஆரோக்கியமான செயற்பாடு இல்லை எனவும் பொன்ராசா தெரிவித்தார்.

இதன்போது, குறித்த தபாலக விடயத்தில் சபையின் செயற்பாடு குறித்து அதிருப்தி வெளியிட்ட தே.ரஜீவன் மற்றும் இதயகுமாரன் ஆகியோர் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமும் அரச திணைக்களங்களுக்கு இன்னொரு சட்டத்தையும் சபை அமுல்படுத்துகின்றது எனக் குற்றஞ்சாட்டிவிட்டு சபையை விட்டு வெளிநடப்பு செய்தனர். (ம319)

# ஐ.ம.சக்தியினர் பலர் விரைவில் ஐ.தே.கவில்

கொழும்பு, ஜன.26

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க உரிய நேரத்தில் சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் ருவன் விஜயவர்த்தன மற்றும் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர். இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்திருக்கும் பலர் இன்னும் ஆறு மாதங்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவார்கள் என்று பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். அத்துடன், கட்சியின் செயற்பாடுகளில் இருந்து தூர விலகி நிற்கும் நவின் திசாநாயக்க, ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் விரைவில் கட்சியில் இணைந்து செயற்படுவர் என்ற நம்பிக்கை உள்ளது என ருவன் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

(ந-இ)

# மேலும் மூன்று எம்.பிக்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, ஜன. 26

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஒருவர் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ள நிலையிலேயே இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் வசந்த யாப்பா பண்டார பங்கேற்றிருந்தார். இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகியோரும் குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர். இதன் காரணமாகவே மேற்படி மூவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

(ரி5-44)

# கிராம அலுவலர் பிரிவுக்காக தொடர்ந்து போராடும் மக்கள்

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் மேலுமொரு கிராம அலுவலர் பிரிவை உருவாக்க வேண்டும் என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றன. யூனியன்குளம், யூனியன்குளம் கிழக்கு, யூனியன்குளம் குடியிருப்பு ஆகிய பகுதிகளை இணைத்து ஒரு கிராம அலுவலர் பிரிவும், கோணாவில், கோணாவில் கிழக்கு, கோணாவில் மத்தி ஆகிய பகுதிகளை இணைத்து ஒரு கிராம அலுவலர் பிரிவும் உருவாக்கப்பட வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 150 குடும்பங்கள் உள்ளடங்குகின்றன. இந்தக் கிராம அலுவலர் பிரிவின் வடக்குப் பக்கமாக உருத்திரபுரம் வடக்கு, சிவநகர், புதுமுறிப்பு ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. தெற்குப் பக்கத்தில் அக்கராயன் காணப்படுகின்றது. கிழக்குப் பக்கத்தில் ஊற்றுப்புலம், கிருஸ்ணபுரம் கிராமங்கள் காணப்படுகின்றன. மேற்குப் பக்கத்தில் கண்ணகைபுரம் கிராமம் காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் காணி உள்ள நூற்றுக்கு உட்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றபோது ஏனைய குடும்பங்கள் வயல் நிலங்கள் அற்ற நிலையிலும், பொருளாதார ரீதியில் வறுமையுடன் வாடுகின்ற குடும்பங்களாகவும் உள்ளன. இந்தக் கிராமத்தில் இருந்து 3 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் நடந்து சென்றே பஸ்களில் மக்கள் பயணிக்கின்றனர். அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு செல்லவே இந்தக் கிராம மக்களுக்கு பஸ் சேவைகள் இல்லை. இந்தக் கிராம அலுவலர் பிரிவை இரண்டாக மாற்றுவதன் மூலம் அபிவிருத்தியில் கோணாவில் கிராமங்கள் முன்னேற்றம் அடையும் என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

(வ-ரி2)

# அதிவேக சாலை விபத்தில் ஒருவர் சாவு!

கொழும்பு, ஜன.26

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டணம் செலுத்தும் பகுதிக்கு அருகிலுள்ள இரும்பு வேலியுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனால் அதிவேக நெடுஞ்சாலையில் வாகன நெரிசல் ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)

# லொறியில் மோதுண்டு முதியவர் உயிரிழப்பு!

திருகோணமலை, ஜன. 26

திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் சீமெந்து லொறியில் மோதுண்டு 65 வயதுடைய முதியவர் உயிரிழந்தார்.

திருகோணமலை பச்சிலை சந்திக்கு அருகாமையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெறறு வருகின்றன. (ம)



# நாட்டில் ஒரு வருடத்துக்கு தேர்தல் எதுவும் இல்லை

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.26**

**நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று நெருக்கடியால் இன்னமும் ஒரு வருடத்துக்கு எந்த தேர்தலும் நடைபெறாது என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

முதலாவது அலையை முடக்க கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடிந்தது. ஆனால் பொருளாதாரத்தையும் நாட்டையும் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்க முடியாது என ஜனாதிபதி கருதுகிறார்.

இதேவேளை 2019 ஈஸ்டர் தாக்குதலால், சுற்றுலாத்துறையால் கிடைக்கும் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை நாடு இழந்துள்ளது. நாடு அதிலிருந்து இன்னும் மீளவில்லை. நாடு கடன் சுமையில் இருந்த போது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும் எம்மால் முடிந்துள்ளது - என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# சுற்றுலாப் பயணிகளால் நாடு புத்துயிர் பெறும்



கொழும்பு, ஜன.26

சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டின் விமான நிலையம் திறக்கப்பட்டதால் எதிர்காலத்தில் சுற்றுலாத் துறை தொடர்பான பல துறைகளில் வெற்றிகரமான பயன்களைப் பெற முடியும் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறியுள்ளார். கொரோனாப் பரவலால் மூடப்பட்ட இலங்கையின் விமான நிலையம் இம்மாதம் 21 ஆம் திகதி சுற்றுலாப் பயணிகளுக்கு அதிகாரப்பூர்வமாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பு சுகாதார வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் சுற்றுலாப் பயணிகளை தங்க வைக்கும் விடுதிகள், சுற்றுலா மையங்கள் மற்றும் நினைவுப் பரிசுக் கடைகள் என்பவை மீண்டும் புத்துயிர் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# எவர் எதிர்த்தாலும் இந்தியாவுக்கே கிழக்கு முனையம்

*இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கூறுகின்றார்*



கொழும்பு, ஜன.26

எவர் எதிர்ப்புத் தெரிவித்தாலும் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு கிராமிய அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

வத்தளை கெரவலப்பிட்டி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலீடுகள் அவசியமானவை. இதனால் இலங்கையில் முதலீடு செய்ய இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய எந்த நாடு முன்வந்தாலும் அதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

நாட்டுக்கு முதலீடுகள் கிடைக்கும்போது இளையோருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நாங்கள் கிழக்கு முனையத்தில் முதலீடு செய்ய இந்தியாவுக்கு வாய்ப்பளிப்போம். நட்பு நாடு என்ற வகையில் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள முடியாது" - என்றார். (ச-22)

# ரோஹிதவுக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 5இல்

கொழும்பு, ஜன.26

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 5 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதிகளில் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சியில் 41.2 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாக கையகப்படுத்தினார் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (வ-இ)

# பிலிப்பைன்ஸ் ராஜதந்திர பணிமனை இலங்கையில்

கொழும்பு, ஜன. 26

இலங்கையில் பிலிப்பைன்ஸின் ராஜதந்திர பணிமனை திறக்கப்படவுள்ளது என வெளியுறவு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, தொலைபேசி கலந்துரையாடல்களின் ஊடாக இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் இரண்டு நாடுகளின் பொருளாதாரம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பேசியுள்ளனர்.

அத்துடன் இரண்டு நாடுகளுக்கும் இடையில் விமான சேவையை ஆரம்பிக்கவும், இவர்கள் இணங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5-இ)

## மேல் மாகாணத்தில்

# பாடசாலைகள் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஜன. 26

மேல் மாகாணத்தில் 907 பாடசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று மேல் மாகாணத்தில் அதிகரித்து காணப்பட்டமையால், அங்குள்ள பாடசாலைகளைத் திறப்பதற்கு இதுவரை காலமும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன. எனவே முதற்கட்டமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மட்டும் நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஏனைய மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உரிய பாதுகாப்புடன் பாடசாலைகளை திறப்பதற்கு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளன என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு மேல் மாகாணத்தில் 79 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது (ரி5-இ)

# 195 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன.26

கொரோனாப் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 195 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 8 விமான சேவைகள் மூலம் இவர்கள் நாட்டுக்கு வரப்பட்டுள்ளனர். இவர்களில் 75 பேர் சவூதி அரேபியாவிலிருந்து வருகை தந்துள்ளனர் என விமான நிலையத்தில் தெரிவிக்கப்பட்டது. (ரி5-இ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நல்லாட்சியே பொறுப்பு

## பந்துல தெரிவிப்பு



கொழும்பு, ஜன.26

நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பைக் குறைத்து மதிப்பிட்டதால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். பலப்பிற்றிய தொகுதியில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் சீர்குலைந்த சுற்றுலாத் துறையை கொரோனா சவாலுக்கு மத்தியிலும் முன்னேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்ட நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தவர்கள் தற்போது அதை மறந்து அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஜன.26

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள வலையிறவு பாலத்தின்கீழ் கைக்குண்டு ஒன்று இன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸாரால் இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதனை நீதிமன்ற அனுமதி பெற்று வெடிக்க வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊசலாடும் உயிரும், வாழ்வும்!

இலங்கை - இந்தியா இடையே, தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்படும் மீன்பிடிப் பிரச்சினையால் நான்கு உயிர்கள் பறிபோயிருக்கின்றன.

தமிழக மீனவர்கள் இலங்கையின் வடக்குக் கடலுக்குள் புகுந்து மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. வடக்குக் கடலில் உள்ள வளங்கள் அதிக வலுவுடன் தமிழக மீனவர்களால் அள்ளப்படுகின்றன. போரின் பின்னர் மெல்ல மெல்லத் தங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பிவரும் வடக்கு மீனவர்களுக்கு இது ஒரு பெரும் பிரச்சினையே.

இந்த அத்துமீறலால் வடக்கு மீனவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கடல் வளம் சுரண்டப்படும் அதேநேரம், தமிழக மீனவர்களின் ரோலர் படகுகளால் வடக்கு மீனவர்களில் வலைகள் துண்டாடப்படுவதும் வழமையாகியிருக்கின்றது. தமிழக மீனவர்களின்அத்துமீறலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை நியாயமானது அவசியமானது என்பதை மறுக்க முடியாது.

மறுபுறத்தில் தங்கள் பகுதிகளில் மீன்வளம் இல்லை என்பதாலேயே கச்சதீவுக் கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுகின்றோம் என்பது தமிழக மீனவர்களின் வாதம். இந்தியா வசமிருந்த கச்சதீவை இலங்கைக்குத் தரைவார்த்தமையே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினை நீண்டகாலமாகத் தொடர்கின்றது. வடக்கு மீனவர்கள் பல போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தியிருந்தனர். இலங்கை அரசும், இந்திய அரசும் இந்த விடயத்தில் பேச்சும் நடத்தியிருந்தன. ஆனால் இந்தப் பிரச்சினை தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில் எல்லை தாண்டும் தமிழக படகுகளை இந்தியக் கடலோர காவல் படையால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது நம்ப முடியாத ஒன்று. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை , கண்ணுக்குள் எண்ணெயை விட்டு கண்காணித்த இந்திய, இலங்கை கடற்படையினருக்கு மீன்பிடிப் படகுகளை எல்லைமீற விடாமல் செய்யக் கூடிய வல்லமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை அரசுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் இந்தப் பிரச்சினையை விரைந்து தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பதே உண்மை. இந்த அசமந்தப்போக்காலே இப்போது நான்கு உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. வெறுமனே சந்திப்புக்களை மேற்கொண்டுவிட்டு அத்துடன் இந்தப் பிரச்சினையை இரு நாட்டு அரசுகளும் கைவிட்டுவிட்டன.

இலங்கை - இந்திய அரசுகள் முனைப்பாக முயன்றால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தப் பிரச்சினையால் வடக்கு மீனவர்களே பாதிப்புக்குள்ளாகும் நிலையில், இலங்கை அரசு அது தொடர்பில் கிஞ்சித்தும் கவலைகொள்வதாக இல்லை. அரசுக்கு முண்டுகொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இப்போது இதற்குப் பொறுப்பான அமைச்சில் இருந்தும், இந்தப் பிரச்சினை கிடப்பிலேயே போடப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களாகட்டும், தமிழக மீனவர்களாகட்டும் அனைவரது உயிர்களும் பெறுமதியானவையே. இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் தொடரக்கூடாது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அதிகாரத்தரப்புக்களின் அசமந்தத்தால் அப்பாவிகளின் உயிரும், வாழ்வும் ஊசலாடும் நிலை மாறும்.

### இன்றைய கருத்தோவியம்



நன்றி : நாமல் அமரசிங்க

# நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.26**

**தேசிய பாதுகாப்பை உயர்ந்தபட்ச அளவில் உறுதிப்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று கைத்தொழில் துறை அமைச்சர் வீரவன்ஸ தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது போதைப்பொருள் கடத்தல், பாதாள உலகச் செயற்பாடுகள் என்பன கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. அனைவரும் அச்சம், சந்தேகம் இன்றி வாழக்கூடிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக்காலத்தில் எவ்.சி.ஐ.டி போன்ற சட்டவிரோத பொலிஸ் பிரிவுகளை நிறுவி அரச ஊழியர்களையும் அரசியல்வாதிகளையும் பயமுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் வெறுப்படைந்த அரச ஊழியர்கள் வேலை செய்யாததால் அந்தப் பணிகள் மந்த கதியில் இடம்பெற்றன.

இவ்வாறான அணுகுமுறை தற்போதைய அரசாங்கத்திடம் இல்லை கடந்த நல்லாட்சிக் காலத்தில் இடைநடுவில் கைவிடப்பட்ட செயற்றிட்டங்களின் பணிகளை ஆரம்பித்து புதிய செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை தற்போதைய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது - என்றார்.

(ற-இ)

## பவித்ராவுக்கு தொற்று: 300 பேருக்குத் தனிமை

கொழும்பு, ஜன.26

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன், சுமார் 300 பேர் வரை தொடர்பில் இருந்துள்ளனர் என தெரியவந்துள்ளது. கடந்த சில தினங்களாக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கலந்துரையாடல்களில் அமைச்சர் பங்கேற்றிருந்தமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் அமைச்சருடனான கலந்துரையாடல்களில் பங்கேற்றுள்ளனர். எனவே, தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரியுள்ளார்.

(வ-இ)

## ஜனாஸா தகனம்; பிரிட்டன் கவலை

கொழும்பு, ஜன.26

கொரோனாத் தொற்றால உயிரிழப்பவர்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வது உட்பட, இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான ஐ.நா. அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் எனவும் அந்த அறிக்கையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பாகவும் தெரிவிக்கப்படும் எனவும் பிரிட்டன் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

(வ-இ)

# இந்திய குடியரசு தினம்






இன்று இந்திய குடியரசு தினமாகும். 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி இந்தியா விடுதலை பெற்றது. இந்திய விடுதலைக்குப் பிறகு, மக்களாட்சி மட்டுமே ஒரு நாட்டின் சிறப்பான வளர்ச்சிக்கு அடையலாம் எனக் கருதி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் இந்திய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி முதல் குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## இந்தியா சுதந்திரம் அடைதல்

ஆங்கிலேயர்களின் அடக்குமுறையைக் கண்டு வெகுண்ட மக்கள் நாளுக்கு நாள் போராட்டங்கள், கழகங்கள், புரட்சிகள் எனத் தொடங்கி, பிரிட்டிஷ்காரர்களை இந்தியாவை விட்டே விரட்ட எண்ணினர். அதன் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிரித்தானிய இந்தியாவில் தேசியவாத உணர்வுகள், காட்டுத் தீ போல் இந்திய மக்களிடையே பரவத்தொடங்கின. 'இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி' என்னும் அமைப்பில் ஒன்றிணைந்த இந்திய மக்கள், 'மின்டோமார்லி சீர்திருத்தம்', 'மாண்டேகு செமஸ் போர்டு சீர்திருத்தம்', 'காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கம்', 'சட்ட மறுப்பு இயக்கம்', 'சைமன் கமிஷனுக்கு எதிர்ப்பு', 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்', 'உப்பு சத்தியாக்கிரகம்' எனப் பல போராட்டங்களை ஆங்கில ஆட்சிக்கு எதிராக அரங்கேற்றினர். இறுதியில், 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் நாள் விடுதலை இந்தியா என்ற புதிய பாரதம் உதயமானது.




## குடியரசு என்பதன் பொருள்

குடியரசு என்பதன் பொருள் 'மக்களாட்சி' ஆகும். அதாவது, தேர்தல் மூலம் மக்கள் விரும்பிய ஆட்சியாளர்களைத் தேர்தேடுத்துக்கொள்ளும் முறை குடியாட்சி எனப்படுகிறது. 'மக்களுக்காக, மக்களுடைய மக்கள் அரசு' என மிகச்சரியாக குடியரசு என்ற வார்த்தைக்கு இலக்கணம் வகுத்துத் தந்தவர், அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன். அத்தகைய மக்களுக்கான அரசை இந்தியாவில் ஏற்படுத்தினால்தான், இந்தியா முழு சுதந்திரம் பெற்ற நாடாக ஏற்றுக்கொள்ளப்படும் எனக் கருதி உருவாக்கப்பட்டது தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்.

## குடியரசு தினக் கொண்டாட்டம்

இந்திய விடுதலைக்குப் பிறகு 1950ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26ஆம் நாள் இந்திய தேசிய குடியரசு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய மூவண்ணக் கொடியை ஏற்றி, இந்த குடியரசுதினக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அன்று முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26ஆம் நாள் தம்முடைய தாய்த் திருநாட்டை காக்க தமது இன்னுயிரையும் நீத்த தியாகிகளை நினைவுகூரும் வகையில் விடுமுறை அளிக்கப்பட்டு, நாடெங்கும் அனைத்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், அலுவகங்களிலும் தேசிய கீதம் பாடி கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று சிறந்த சேவை புரிந்தோருக்கும், வீரதீர சாகசம் புரிந்தவர்களுக்கும் விருதுகள், பாராட்டுகள், பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. சுதந்திரம் பெற்ற பிறகு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் என்ற சிறப்புப் பெற்ற ஜவர்ஹலால் நேருவின் முன்னிலையில் முதல் குடியரசு தின அணிவகுப்பு நடைபெற்றது. மேலும், அன்றைய நாள் புதுடில்லியில் குடியரசுத்தலைவர் முன்னிலையில் முப்படைகளின் அணிவகுப்பும், அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாநிலங்களின் சார்பில் அவர்களின் சாதனை அலங்கார ஊர்தி அணிவகுப்பும் நடைபெறும்.

### அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்தவருக்கு கொரோனா

கொழும்பு, ஜன.26
வெலிமட நகரில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்த நபரொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நோய் அறிகுறிகள் தென்பட்டதால், சுகாதாரத் துறையினருக்கு அவர் அறிவித்ததன் பிரகாரம், அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரிசோதனை முடிவுக்கு அமைய அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஜனாஸாக்களின் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்க வேண்டும்

## எம்.பி முஜிபுர் ரஹ்மான் காட்டம்



**கொழும்பு, ஜன.26**
**அரசாங்கத்தின் அனைத்து விடயங்களையும் பொறுப்பேற்கிறேன் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதியே, முஸ்லிம்களது ஜனாஸாக்களை எரிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாமா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தது. அந்தக் குழு தனது அறிக்கையை கடந்த மாத இறுதியில் சுகாதார அமைச்சுக்கு கையளித்திருந்தது. அத்துடன் அரசாங்கத்தின் தொழில் நுட்பக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை. அதில் சட்ட மருத்துவர்களும் அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் ஆலோசகர்களுமே உள்ளனர். ஆனால் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் 11பேரில், 6பேர் வைரஸ் தொடர்பான விசேட நிபுணர்களாவர். ஏனையவர்கள் வேறு துறைசார்ந்த நிபுணர்கள். இவர்களின் அறிக்கையை அரசாங்கம் தற்போது மறைப்பது அரசியல் நோக்கத்துக்காகும், என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

### தடுப்பு மருந்து தாமதமாகும்


கொழும்பு. ஜன.26
இலங்கை மக்கள் அனைவருக்கும் கொரோனாத் தடுப்பு மருந்து கிடைக்க இரண்டரை வருடங்களாகும் என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து மார்ச் மாதமளவிலேயே கிடைக்கலாம். சனத்தொகையில் 15 சதவீதமானவர்களுக்கே தடுப்பு மருந்து கிடைக்கும். ஒருவருக்கு இரண்டு டோஸ்களை வழங்கவேண்டும் என்பதால் 6 லட்சம் மருந்துகள் மூன்று இலட்சம் பேருக்கே போதுமானதாகயிருக்கும். உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து கிடைக்கும் மருந்துகளை சனத்தொகையின் 20 வீதமான மக்களுக்கே வழங்க முடியும். ஒருவருக்கு இரண்டு டோஸ்கள் வழங்கப்படவேண்டும் என்பதால் மார்ச்சில் 15வீதமான வர்களுக்கே மருந்து கிடைக்கும். இலங்கை மக்கள் அனைவருக்கும் கொரோனா வைரஸ் மருந்து கிடைக்க இன்னமும் இரண்டரை வருடங்களாகும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மாணவர்களுக்கு இலவச முகக் கவசம்!

### ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஜன.26
பாடசாலை மாணவர்களுக்கு முகக் கவசம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளதாவது, கொரோனாத் தொற்று அதிகம் உள்ள பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைக்குள் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால், அது பெரும் சிக்கலை ஏற்படுத்தும். பாடசாலை மாணவர்களுக்கு முகக்கவசம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



### சபாநாயகர் – பிரதமர் நேற்றுச் சந்திப்பு!

கொழும்பு, ஜன.26
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றுக்காலை விஜேராமவில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்தார்.
இதன்போது எதிர்கால நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய நாடாளுமன்ற நடவடிக்கைகளை உரியமுறையில் நடத்திச் செல்வது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ற-இ)

### இணைய வழியில் துறைமுக சேவை

கொழும்பு. ஜன.26
கொழும்புத் துறைமுகத்தின் அனைத்து இறக்குமதி செயற்பாடுகளுக்குமான கொடுப்பனவுகளை இணையத்தின் ஊடாகச் செலுத்துவதற்கு இலங்கைத் துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த முறையின் ஊடாக சேவை பெறுநர்கள் தமது வீடுகளில் அல்லது தொழில் நிலையங்களில் இருந்தவாறு துறைமுக கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். துறைமுக அதிகார சபை தலைவர் ஜெனரல் தயரத்நாயக்கவின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படும் இந்த விசேட திட்டத்தின் கீழ் கொவிட்19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் கொழும்புத் துறைமுகத்தில் உள்ள முனையங்களின் சேவை நடவடிக்கைகள் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. துறைமுக முனையங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய முகாமைத்துவத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுகாதார வழிமுறைகளுக்கு அமைய துறைமுக சேவை நடவடிக்கைகள் இணையத்தளம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. முழுமையான கொள்கலன் களஞ்சியப்படுத்தல், பகுதியளவான கொள்கலன் களஞ்சியப்படுத்தல், வெளியீட்டு முகவர் ஆகிய விடயங்கள் துறைமுக அதிகார சபையின் உத்தியோகப்பூர்வ இணையத்தள பகுதியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. (வ-இ)

# கோடரி வெட்டில் முடிந்த குடும்பத் தகராறு

திருகோணமலை, ஜன.26
சகோதரியின் கணவரை மைத்துனர் கோடரியால் வெட்டிய சம்பவம் ஒன்று திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதையடுத்து மொரவெவ பொலிஸாரால் மைத்துனர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெட்டுக்கு இலக்கான நபர், கைது செய்யப்பட்டவரின் சகோதரியை திருமணம் செய்த நிலையில் தற்பொழுது பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவரது வீட்டுக்கு நேற்றுந் சென்று முரண்பாட்டில் ஈடுபட்டநிலையில் மைத்துனர் கோடரியால் வெட்டியுள்ளார். வெட்டுக்கு இலக்கானவர் காயங்களுடன் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளதுடன், மைத்துனனும் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நபர் மகதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என பொலிசார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

### சிறைச்சாலை

# கொரோனாச் சாவு 9 ஆக அதிகரிப்பு!!

கொழும்பு. ஜன.26
சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் தொகை 9 ஆக அதிகரித்துள்ளது என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில், காலி சிறைச்சாலையில் புதிதாக ஒரு மரணம் பதிவாகியுள்ளது. இந்த நிலையில் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், 5 அதிகாரிகள் உட்பட 138 பேரே தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.
சிகிச்சை பெற்றுவந்தவர்களில் 129 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 4 ஆயிரத்து 105 பேர் குணமடைந்துள்ளனர்.
இதேவேளை, வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலைகளில் 4 ஆயிரத்து 388 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
134 சிறைச்சாலை அதிகாரிகள், 489 ஆண் சிறைக் கைதிகள், 11 பெண் சிறைக் கைதிகள், 3 ஆயிரத்து 520 ஆண் விளக்கமறியல் கைதிகள், 234 பெண் விளக்கமறியல் கைதிகளுமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

## இன்றைய நாள்





**மேடம்:** அக்கம் பக்கத்தினருடன் ஏற்பட்ட பகையைத் தீர்த்து வைப்பீர்கள். உடல் அழகைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களுக்கு செய்யும் அறிவுரையால் பலனடைவர்.



**இடபம்:** கடந்த சில காலமாக இருந்த அல்லல்கள் தீரும். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாகப் பேசுவார்கள். பெண்களுக்கு சிறு மனஅழுத்தம் ஏற்பட்டு சரியாகும்.



**மிதுனம்:** இழந்திருந்த உற்சாகத்தை மெல்ல மீட்டெடுப்பீர்கள் . சமீபத்திய புது முயற்சியில் சிறு பின்னடைவு இருக்கக்கூடும் உங்களுடைய திறமையில் நீங்கள் நம்பிக்கை வைப்பீர்கள்.



**கடகம்:** பணியாளர்களுக்கு மிகச் சிறிய அளவில் திடீர் யோகம் கிட்டும். தனிப்பட்ட வாழ்க்கையில் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள். புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.



**சிம்மம்:**குடும்ப நன்மை மற்றும் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். அநாவசியச் செலவுகளை நன்கு கட்டுப்படுத்த வேண்டும். மனதில் ஏற்படும் பயத்தின் காரணமாக மகிழ்ச்சி குறையும்.



**கன்னி:**நட்பால் மிகச் சிறிய அளவில் மட்டுமே ஆதாயம் உண்டு. உணர்ச்சிவசப்பட்ட நிலை காணப்படும் என்பதால் கவனம் தேவை. சிந்தனைகள் நியாயமானதாக இருக்கும்.



**துலாம்:** உங்களுக்கென ஒரு சிறு குழுசேரும். கவனமாக இருங்கள். எண்ணங்களை முறையாகச் செயற்படுத்த முடியாமல் போகலாம். எதிர்மறை எண்ணங்கள் உருவாகும். தனித்திறன்கள் வெளிவரும்.



**விருச்சிகம்** அஜாக்கிரதையால் தொல்லையில் மாட்டாது கவனமாக இருங்கள். நண்பர்களும், உறவினரும் நடந்துகொண்ட முறை ஏமாற்றம் அளிக்கும். குறைகளை எடுத்து சொல்வீர்கள்.



**தனுசு** எதையும் முழு ஈடுபாட்டுடன் செய்து நற்பெயர் பெறுவீர்கள். கூட்டத்திலிருந்து விலகித் தனியாய்த் தெரியும்படி நடப்பீர்கள். இன்று நல்ல நாள். அலுவலகத்தில் திறமையை நிரூபிப்பீர்கள்..



**மகரம்** மனம் மகிழும்படியான விஷயங்கள் நடைபெறும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்காதது குறையாக இருக்கும். சுற்றியுள்ளவர்கள் உங்களைப் புரிந்துகொள்ளத் திணறுவர்.



**கும்பம்:** பற்றாக்குறை அகலும். விதிகளை மீறாதிருப்பது நலம். உங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு நற்பெயர் எடுப்பீர்கள். காலையில் நிம்மதி அளிக்கும் செய்தி ஒன்று வரும்.




**மீனம்:** ஆட்டம் பாட்டம் என்று மாலை முழுவதும் மகிழ்ச்சி உண்டு. உடல் உழைப்புக்குத் தேவையான விஷயங்களைச் செய்வீர்கள். மற்றவர்களைக் கேள்வி கேட்டு நியாயத்தை நிரூபிப்பீர்கள்.

# கொரோனாத் தொற்று உச்சம்; மன்னார் மக்களே அவதானம்!

**மன்னார், ஜன.26**

**மன்னாரில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இதனால் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தமது சுய பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று மருத்துவ கலாநிதி வினோதன் தெரிவித்தார்.**



கொரோனாத் தொற்றுடன் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 140 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனாவால் வடக்கு மாகாணத்தில் மூவர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்களில் இருவர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நிலையிலேயே மருத்துவ கலாநிதி மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 140 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 123 தொற்றாளர்கள் இந்த மாதமே அவதானிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர். இறுதியாக இறந்த நபர் கடந்த வாரம் மன்னார் பொது மருத்துவமனையின் இரண்டாவது விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அங்கு கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் அவருக்குத் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதுவரையில் மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 649 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மன்னார் மாவட்டத்தின் சனத்தொகையில் இருபதுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் காணப்படுகின்றது. மன்னார் பகுதியில் கோந்தல்பிட்டி, உப்புக்குளம், மூர் வீதி, எருக்கலம்பிட்டி மற்றும் மன்னார் பஜார் போன்ற இடங்களிலேலேயே அதிகமான தொற்றாளர்கள் அவதானிக்கப்படுகின்றனர்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களுக்கும் உள்ளது. மக்கள் தம் பொறுப்புக்களை உணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டும், என்றார். (ம-60)

## ஆபத்தான சூழ்நிலையிலேயே கல்வி நிலையங்கள் ஆரம்பம்

*பரு.பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எச்சரிக்கை*

பருத்தித்துறை ஜன.26

ஆபத்தான சூழ்நிலையிலேயே தற்போது கல்வி நிலையங்ககளை ஆரம்பிக்கிறோம். எனவே மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் கொவிட் பரவல் கல்வி நிலையங்களூடாக ஏற்படாதிருக்கும் பொறுப்பை கல்வி நிலைய இயக்குநர்களும், ஆசிரியர்களும் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்று பருத்தித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களை மீளத்திறப்பது சம்பந்தமான கருத்தமர்வு கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்து கொண்டனர். சவால்களும் கஷ்ரங்களும் நிறைந்த சூழலில் மாணவர்களின் கல்வியைத் தடையின்றி முன்னகர்த்திச் செல்ல கொவிட்-19 தடுப்புச் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை நூறுவீதம் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்களுக்கான கொவிட் 19 தடுப்புச் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது இயங்கும் கல்வி நிலையங்கள் இயங்கத் தடைவிதிக்கப்படவுள்ளன. சட்ட நடவடிக்கைக்கும் அவை உட்படுத்தப்படும் - எனவும் சுகாதாரப் பரிசோதகர் றொனால்ட் தெரிவித்தார். (ப-9)

# கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்

*அமைச்சர் ரோஹித தெரிவிப்பு*



கொழும்பு. ஜன.26

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் துறைமுக தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என துறைமுக மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக முன்னெடுக்கும் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் மறைந்துள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும்போது துறைமுக ஊழியர் சங்கத்தினர் எதிர்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். துறைமுக ஊழியர் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ-இ)

## அபாயக் கட்டத்தில் தொற்றாளர் வீதம்!

கொழும்பு, ஜன.26

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர் வீதத்தின் உயர்வு அபாயக் கட்டத்தை எட்டியுள்ளமை உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வீதமானது 5.5 விளிம்பு நிலை வீதக்கைக் [illegible] கடந்துவிட்டது என மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

இந்த நேர்மறை வீதமானது ஒரு மாதத்துக்கு முன்பாக 3.0 மட்டத்தில் இருந்ததுடன், பின்னர், 4ஆம் மட்டத்துக்கு அதிகரித்து, இப்போது 5ஆம் மட்டத்தைக் கடந்து 5.5 அளவில் உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக மேல் மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கு வைரஸ் பரவுவதைக் தடுக்க நாடு தவறிவிட்டது. இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகமான உபகொத்தணிகள் உருவாகத் தொடங்கியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)


# ஆறுமுகத்தான்குளம் கிராமத்தை எட்டிப் பார்க்க மறுக்கும் பஸ்கள்

## பொதுமக்கள் கவலை

**வன்னேரிக்குளம்,ஜன.26**

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்று, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் கிராமத்துக்கு பஸ்கள் வருவதில்லை என்று பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; "ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் சுமார் 115 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. இந்நிலையில் இவர்கள் அன்றாட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பல கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டியுள்ளது. அயற்கிராமமான குமுழமுனை கிராமத்துக்கு அடிக்கடி பஸ்கள் வருகின்ற போதும், ஆறுமுகத்தான் குளத்துக்கு பஸ்கள் வருவதில்லை. இக் கிராமத்தில் இருந்து குமுழமுனை மகா வித்தியாலயத்துக்குச் செல்கின்ற மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கடந்த காலங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை. எனவே குமுழமுனை கிராமத்துக்கு வருகின்ற பஸ்களை ஆறுமுகத்தான் குளத்துக்கும் வந்து செல்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்" என்றனர். (ஐ-ரி2)



## பனை மரங்களை வைத்திருந்தவர் கைது

வடமராட்சி, ஜன.26

சட்டவிரோதமான முறையில் பனை மரங்களைத் தறித்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஒருவர் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின் போது குறித்த பகுதியில் பெருமளவான பனைமரங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-20)

## முள்ளிவாய்க்கால் தூபி உடைப்புக்கு

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

வலி.தென்மேற்கு, ஜன.26

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இரவோடு இரவாக இடித்து அகற்றப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வலி. தென்மேற்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான முதலாவது மாதாந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டதைக் கண்டித்து சபையின் 5 கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் காரசாரமாக உரையாற்றினர்.

இதையடுத்து உறுப்பினர் க.ஜெசீதன் தன் கண்களை கறுப்பு துணியால் மறைத்தவாறு "சிறுபான்மை இனத்தின் உரிமைகளையும் உணர்வுகளையும் சுருக்கிட்டு சிதைக்கும் சதித்திட்டத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்" என்று கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். இதனையடுத்து சபை உறுப்பினர்கள் அனைவரும் முள்ளிவாய்க்கால் தூபி உடைப்புக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்ததையடுத்து சபையால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ-115)

## கடத்தி வரப்பட்ட மஞ்சளுடன் ஒருவர் கைது

மன்னார், ஜன.26

சிலாவத்துறை, அலைக்கட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 341 கிலோகிராம் மஞ்சளுடன் 19 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை மன்னார் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## 200 பேருக்கு தனிமை நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.26

விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கட்டார் நாட்டிலிருந்து வருகைதந்த 200 பேர் தனிமைப்படுத்தப்படுத்தலை நிறைவுசெய்து கடந்த சனிக்கிழமை தத்தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

களுத்துறை, அம்பாறை, மன்னார், பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் தமது வீடுகளுக்கு செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகளை இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். (ந)




சாவகச்சேரி பெரியமாவடி கந்தசுவாமி கோவிலில் நிர்மாணிக்கப்பட்ட ஏகதள கோபுர வேலைகள் நிறைவு பெற்று நேற்று கும்ப முழுக்கு இடம்பெற்றது. (ரி5-9)

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி மாணவர்கள் பாதிப்பு

சாவகச்சேரி,ஜன.26

கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகி மாணவர்கள் ஐவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது. மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகினர். கடந்த வாரமும் இதுபோன்று பாடசாலையை அண்மித்த பகுதியில் சென்ற மூவர் கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். இது தொடர்பாக உரிய பகுதியினருக்கு அறிவித்த போதிலும் குளவிக் கூட்டை அகற்றும் நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 9)





## ஆய்வு நூல் வெளியீடு

கிளிநொச்சி,ஜன.26

"வடக்கின் நீர் ஆதாரமும், பங்கீட்டுக் கொள்கையும், அதன் பயன்பாட்டு உத்திகளும் 2020-2035 " என்ற ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன் தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைகழக பொறியியல் பீடத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவகுமாரின் இந்த ஆய்வு நூல் வெளியிட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க, விவசாய விஞ்ஞானி கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி பெற்றுக்கொண்டார். கிளிநொச்சி மக்கள் சிந்தனைக் களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துறைசார் அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-214)



# நீங்கள் எந்தத் திகதியில் பிறந்தவர்? உங்கள் குணம் எப்படி?



நீங்கள் பிறந்த திகதியை அடிப்படையாகக் கொண்டு உங்கள் குணாதிசயம் பற்றி விளக்குவதே எண்கணிதம். 1 முதல் 9 வரையான திகதிகளில் பிறந்தவர்கள் அல்லது பெயர் எண் 1 முதல் 9 வரை அமைந்திருப்பவர்களுக்கு, அவரவர்களின் பிறந்த திகதி அல்லது பெயரெண் அடிப்படையில் பலன்களை கணித்துக் கூறுவதே எண்கணிதம் பலன்கள். ஒருவருடைய பிறந்த திகதி அல்லது பெயரெண் அடிப்படையில் அவர்களுடைய இயல்புகள் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

ஒருவரின் பிறந்த தேதி 10 ஆக இருந்தால், அவருடைய எண் 1 ஆகும் (1+0=1). அதேபோல் ஒருவரின் பிறந்த தேதி 15ஆக இருந்தால் அவருடைய எண் 6 ஆகும் (1+5=6). இப்படியே ஒருவர் அவருடைய பிறந்த தேதியை அறிந்துகொள்ளலாம்.

**1** ஒருவரின் பிறந்த திகதி, அல்லது பெயரெண் 1ல் அமைந்திருந்தால், அவர் தன்னம்பிக்கை மிக்கவராகக் காட்சி தருவார். தைரியம், மற்றும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவராக இருப்பார். சுதந்திர மனப்பான்மை கொண்டவர். இவர் எந்த இடத்தில் இருந்தாலும், அந்த இடத்தில் தலைமைப் பொறுப்பு வகிப்பார். ஆளுமைத் திறனும், மன உறுதியும் மிக்கவர். இவர்கள் சூரியனை வழிபடுவது நல்லது. இவர்கள் இறைபக்தியால் வாழ்க்கையில் பல சாதனைகளைப் படைப்பார்கள்.

**2** பிறந்த திகதி அல்லது பெயரெண் 2ல் அமைந்திருந்தால், மிகவும் மென்மையானவர்களாகவும், பழகுவதற்கு இனிமையானவர்களாகவும் இருப்பார்கள். அதே நேரம் வெகு விரைவில் உணர்ச்சி வசப்படுவார்கள். ஒரு சிறு துன்பத்தையும் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். பரபரப்பாகவும், வேகமாகவும் செயற்படும் இவர்கள், சிறு சோதனை வந்தாலும் சோர்ந்து போவார்கள். இவர்கள் தங்கள் உடல்நலனில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். இவர்கள் அம்பிகையை வழிபடுவதால், வாழ்க்கையில் பல வளங்கள் சேரும்.

**3** பிறந்த திகதி அல்லது பெயரெண் 3ல் அமைந்திருப்பவர்கள், மற்றவர்களைக் கவரும் தோற்றம் பெற்றிருப்பார்கள். புதுப்புது ஆடை, ஆபரணங்களை விரும்புவார்கள். ஆனால், இவர்கள் தங்களுக்கே இயல்பாக இருக்கும் பிடிவாத குணத்தை மாற்றிக் கொள்வதன் மூலம், வாழ்க்கையில் பல சாதனைகளைப் புரியலாம். இவர்களில் பலரும் ஆன்மிகத்தில் நாட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

**4** பிறந்த திகதி அல்லது பெயரெண் 4ல் அமைந்திருந்தால், எந்த ஒரு பேதமும் பார்க்காமல் அனைவரிடமும் நட்பு பாராட்டும் குணம் கொண்டவர்களாகத் திகழ்வார்கள்.

புரட்சிகரமான சிந்தனைகளுக்குச் சொந்தக்காரர்கள் இவர்கள். எதிலும் கட்டுப்பாட்டோடு வாழும் இவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பார்கள். கடுமையாக உழைக்கும் இவர்கள், சவாலான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். இவர்கள் துர்க்கையை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

## இலங்கை வருவதற்கு 198 பேர் விண்ணப்பிப்பு!

கொழும்பு, ஜன.26

இலங்கை வருவதற்கு 198 வெளிநாட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் கயான மிலிந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, விசா விண்ணப்பித்த நபர்களின் தரவுகள் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

எனினும் தேசிய பாதுகாப்புக் காரணமாக இலங்கைக்கு அழைக்க முடியாத நபர்களைத் தவிர்த்து ஏனைய அனைவருக்கும் விசா வழங்கப்படும்.

ஜனவரி மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஒன்லைன் மூலம் விசா விண்ணப்பிக்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டது. எனினும் அந்தச் செயற்பாட்டை மீள ஆரம்பிக்குமாறு வெளிநாட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நபர்கள் உள்ளார்களா என ஆராய்வதற்கு புலனாய்வுப் பிரிவினரால் விசேட பிரிவு நியமிக்கப்பட்டுள்ளது-என்றார். (ற-இ)



## "சுகாதாரமான கிளிநொச்சி" விழிப்புணர்வு செயற்றிட்டம்

கிளிநொச்சி.ஜன.26

"சுகாதாரமான கிளிநொச்சி" எனும் தொனிப் பொருளில் கிளிநொச்சி றோட்டறிக்கழகத்தால் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-6)

## வீதியால் பயணித்தவரை தாக்கிவிட்டு பணம் பறிப்பு

சாவகச்சேரி ஜன. 26

கடலுணவு கொள்வனவு செய்ய வந்த வியாபாரியை வழிமறித்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த பணத்தைப் பறித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை நுணாவில் ஏ9 வீதியில் இடம்பெற்றது. [illegible] கைதடியிலிருந்து சாவகச்சேரிக்கு வந்தபோது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை கச்சாய்ப் பகுதியில் சாவகச்சேரியில் கடலுணவு விற்பனை செய்து விட்டு வீடு திரும்பியவரைத் தாக்கி அவர் கொண்டு சென்ற பணத்தை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் திருடிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ரி5-9)

## தென்மராட்சிப் பகுதியில் தேங்காய் திருட்டு அதிகரிப்பு

கொடிகாமம், ஜன 26

தென்மராட்சி கிழக்கு பகுதியில் அண்மைக்காலமாக தேங்காய்த் திருட்டு அதிகரித்துள்ளது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தேங்காயொன்றின் விலை 50 ரூபாவிலிருந்து நூறு ரூபா வரை அதிகரித்துள்ள நிலையில், கொடிகாமம், கச்சாய், அல்லாரை ஆகிய பகுதிகளில் இரவிலும் பகலிலும் வீட்டில் குடியிருப்பாளர்கள் இல்லாத நேரத்தில், திருடர்களால் தேங்காய்கள் களவாக பறித்துச்செல்லப்படுகின்றன என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (ந-159)

## யானைத் தாக்குதலுக்கு இலக்கானது சைக்கிள்

### விவசாயி அருந்தப்பு

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட இத்திமடு பகுதியில் காட்டு யானைத் தாக்குதலில் இருந்து விவசாயி ஒருவர் உயிர் தப்பியுள்ளார். அவரது மிதிவண்டி காட்டு யானையால் மிதித்து நாசம் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய இந்த விவசாயி இத்திமடுவில் உள்ள தனது வயலுக்கு காவலுக்குச் சென்றவேளை வீதியால் திடீரென குறுக்கறுத்த காட்டு யானையில் மோதி விழுந்துள்ளார். காட்டுயானையில் இருந்து தப்பிக்க மிதிவண்டியை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு விவசாயி ஓடியுள்ளார். இந்த [illegible] நிலையிலேயே காட்டு யானை குறித்த மிதிவண்டியை காலால் மிதித்துச் சேதப்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலும் வனஜீவராசிகள் திணைக்களத்திடமும் குறித்த விவசாயி முறையிட்டுள்ளார். (ந-19)

## மனிதவள மேம்பாட்டுக்கு 17 வகையான பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன. 26
யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் மனிதவள மேம்பாட்டுக்கான 17 வகையான பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பயிற்சித் திட்டங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியாக நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பயிற்சித் திட்டங்களுக்குரிய வளவாளர்கள் தங்களின் முழுப் பெயர், பதவி, தொலைபேசி இலக்கம் மற்றும் மண்டப வசதி இருப்பின் அது தொடர்பான தகவல்களையும், தங்களது அலுவலகத்திலிருந்து எத்தனை பயிற்சியாளர்கள் இணைக்கப்படவுள்ளனர் என்பது தொடர்பான விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஆகிய நகரசபைகள் ,நல்லூர், வடமராட்சி தெற்கு மேற்கு,/வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு , வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, வேலணை,வலிகாமம் தென்.மேற்கு, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச சபைகள் ஆகியவற்றில் இப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ஜ-9)

### முல்லைத்தீவிலிருந்து

# கொழும்புக்கு மீண்டும் பஸ் சேவை ஆரம்பம்

**முல்லைத்தீவு, ஜன.26**
**முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு மீண்டும் இலங்கை போக்குவரத்து சபையால் பேருந்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இதனடிப்படையில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் புதுக்குடியிருப் பில் இருந்து இரவு 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து முல்லைத்தீவு வவுனியா ஊடாக அடுத்த நாள் அதிகாலை கொழும்பு சென்றடையும். அத்துடன் கொழும்பில் இருந்து இரவு 8.30 மணிக்குப் புறப்படும் முல்லைத்தீவு பேருந்து அதே வழியாக புதுக்குடியிருப்பு வரை சென்றடையும் என்று இலங்கைப் போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலையினர் அறிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் கடந்த ஆண்டு இறுதியில் இனங்காணப்பட்ட நிலையில், இந்த பேருந்து சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-19)



## கன்னாட்டி அ.த.க.பாடசாலையை விரைவில் திறக்க நடவடிக்கை

வவுனியா, ஜன.26
நீண்ட நாள்களாக மூடப்பட்டுள்ள கன்னாட்டி அ.த.க.பாடசாலையை விரைவில் திறக்க வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான க.திலீபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக கிராம மக்கள் எனது கவனத்துக்கு கொண்டுவந்தனர். இந்நிலையிலேயே கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி இப் பாடசாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-110)

## கடந்த ஒரு வாரத்தில் 503 மாதிரிகள் ஆய்வுக்கு

சாவகச்சேரி,ஜன. 26
சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனையில் 503 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரையான காலப் பகுதியில் நடத்தப்பட்ட எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகளே ஆய்வுக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஜ-9)

## நிர்வாகத்தினர் தெரிவு

கிளிநொச்சி, ஜன.26
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத் தெரிவு கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்படி இந்த வருடத்துக்கான மாவட்ட சம்மேளனத் தலைவராக அஜந்தன் தெரிவுசெய்யப்பட்டார். இதன்போது கடந்த வருடம் சிறப்பாக செயற்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில், கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்றத்துக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் பயன்படுத்தி வருவது தொடர்பிலும், இளைஞர் திறன் விருத்தியை ஊக்குவிக்கும் வகையில் அதனை விடுவித்துத் தர நடவடிக்கை மேற்கொள்ள விடயத்தை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நிகழ்வின் அதிதியாக கலந்து கொண்ட இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் சிவராமிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (வ-6)


★ ★ ★ ★

வவுனியா,ஜன.26
வவுனியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மேளனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான தலைவராக சண் இளைஞர் கழகத்தின் தலைவர் கிரிஸ்ஷன்ராஜ் , உப தலைவராக யுரேனஸ் இளைஞர் கழகத்தின் தலைவர் கணேசலிங்கம் சிம்சுபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வில் அதிதிகளாக வவுனியா பிரதேசசெயலர் கமலதாசன், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் அஜித் சந்திரசேன, வவுனியா பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் விந்துஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-110)






# கொரோனாவும் மாணவர்களின் கல்வி நிலையும்

ஷஜீபனா பத்மநாதன்

> இன்று அநேகமாக 100 வீதத்துக்கும் 70 வீதத்துக்கும் இடையிலான மாணவர்களின் கல்வி இணைய வழிக் கற்கை நெறிக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்த Zoom இனூடான கற்கை எத்தனை மாணவர்களுக்குச் சாத்தியம்?


இன்று உலகையே ஆட்டிப் படைத்து தன் கோரப்பிடியில் மக்களை சிக்கித் தவிக்க வைத்திருக்கும் கொரோனா எனும் கொடிய நோயானது, உயிர்களைக் காவு கொள்வது மட்டுமன்றி, பலரது வாழ்க்கைத் தொழிலை கேள்விக்குறியாக்கி பல இன்னல்களை நம்மவர்களுக்கு தந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. இந்தக் கொடிய நோயின் தாக்கம் முதியவர்களை பெரிதும் பாதிக்கும் என்பது ஒரு பெரிய கருத்தாக இருந்தாலும் சிறுவர்கள் முதல் இளையோர் என யாவரையும் விட்டு வைக்கவில்லை. அதிலும் குறிப்பாக மாணவர்களுடைய நிலைமை கேள்விக் குறியான ஒன்றாகும்.

மாணவர்கள் எனும்போது எந்த மாணவர்கள் என்பது ஒரு வினாதான். பள்ளி செல்லும் பச்சிளம் பாலகர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவரது கல்வி நிலையிலும் கொரோனாவின் பாதிப்பு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. மாணவர்களின் கல்வி நிலையை நிலைநிறுத்து வதில் பெற்றோர்கள் ஒருபுறமும் ஆசிரியர்கள் ஒருபுறமும் அரசாங்கம் ஒருபுறமும் என எத்தனையோ நடவடிக்கைகள், செயற்றிட்டங்களை முன்னெடுத்தாலும் மாணவர்களின் நிலை திண்டாட்டத்தி லேயேதான் காணப்படுகின்றது. கொரோனா ஆரம்பித்து தனது முதலாவது பிறந்த தினத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்து அடுத்த அகவையிலும் காலடி பதித்துவிட்டது. இந்த ஒருவருட காலப்பகுதியில் எத்தனை நாள்கள் பாடசாலை மூடப்பட்டிருந்திருக்கும்? 2020 ஆம் ஆண்டில் பாடசாலை மூடப்பட்ட நாள்கள் பாடசாலை நடைபெற்ற நாள்களைப் பார்க்கிலும் மூன்று மடங்காகும். தனியார் கல்வி நிலையங்களும் சமூகப் பரவல் காரணமாக மூடப்பட்டுவிட்டன. மாணவர்கள் அனைவரும் வீட்டில் இருந்தவாறே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கமும் அறிவித்துவிட்ட நிலையில், இது இலங்கையில் எத்தனை மக்களுக்கு எத்தனை நாள்களுக்கு சாத்தியமாகும்?

**கல்வி முறையும் மனஉளைச்சலும்**

எம் நாட்டில் கல்வி பயிலும் மாணவர்களில் பலர் பின்தங்கிய கிராமப் புறங்களிலிருந்து பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பி கல்வி கற்கின்றனர். அதேபோல் விவசாயிகள், தொழிலாளிகள் எனப் பலர் தமது பல இன்னல்களுக்கு மத்தியிலும், தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக வெயில், மழை பாராது அயராது உழைக்கின்றனர். ஆனால் இன்று பலரது வாழ்க்கையும் கேள்விக்குறியாகி நிற்கின்ற நிலையில் தமது பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்பட்டிருப்பது பல பெற்றோர்களுக்கு மனஉளைச்சலை உண்டுபண்ணும் பிரதான காரணியாகும். இன்று அநேகமாக 100 வீதத்துக்கும் 70 வீதத்துக்கும் இடையிலான மாணவர்களின் கல்வி, இணைய வழிக் கற்கை நெறிக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்த zoom இனூடான கற்கை எத்தனை மாணவர்களுக்குச் சாத்தியம்? எத்தனை நாள்களுக்கு சாத்தியம் என்பது ஒரு ஆய்வுக்குரிய விடயமாகும். வெளிநாடுகளில் இணையவழிக் கற்கை என்பது பழக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் இலங்கையில் இணைய வழிக் கற்கை என்பது கொரோனாவுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். எனவே, இன்னமும் மாணவர்கள் அதற்கு முழுமையாக பழக்கப்படவில்லை என்பது உண்மையாகும். எனவே ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தக் கொரோனா காலப்பகுதியில் இலங்கையிலுள்ள மாணவர்களின் கல்வி நிலைமை சிக்கலான நிலையில் காணப்படுகின்றது. இன்று பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகள் zoom இனூடாக நடைபெறுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடும்போது தொலைபேசி, கணினிப் பாவனையில் கூடிய தொழில்நுட்ப உடைமையினால் படிப்படியாக அதற்குப் பழக்கப்பட்டு வருகின்றனர். ஆனால் அவர்களால் எவ்வளவு தூரம் இக் கற்கைநெறியில் ஈடுபாடு காட்டக் கூடியதாக இருக்கின்றது என்பது சந்தேகமே. இந்த நிலையில் பாடசாலை மாணவர்களில் பலர் தொலைபேசிப் பாவனையில் போதிய தொழில்நுட்ப அறிவு இல்லாது இருப்பதுடன், பின்தங்கிய நிலையி லுள்ள எத்தனையோ மாணவர்கள் தொலைபேசி வசதி இன்றியே காணப்படுகின்றனர். முக்கியமாக இந்த zoom இனூடான கற்கை என்பது பல பின்தங்கிய கிராமப்புற மாணவர்களையும், ஏழைக்குடும்ப மாணவர்களையும் இன்னல்களுக்கு உட்படுத்தி அவர்களை மனஉளைச்சலுக்குள்ளும் தள்ளுகின்றது. சாதாரணமாக ஒரு ஏழை மாணவனின் மனநிலையிலிருந்து சிந்திக்கும்பொழுது, வீட்டுச் சூழல் என்பது எல்லா மாணவர்களுக்கும் பொருத்தமான கல்விச் சூழலை ஏற்படுத்தித் தருவதில்லை. அதேபோல் அவர்கள் smart phone இற்கு பழக்கப்பட்டவர்களாகவும் இருக்கமாட்டார்கள் என்பதைவிட பல ஏழை மாணவர்களின் வீட்டில் smart phone பயன்படுத்தப்படுவதுமில்லை. இந்தநிலையில் zoom செயலியினூடான கற்கைநெறியில் எவ்வாறு அவர்கள் ஏனைய மாணவர்களைப் போல் ஈடுபட முடியும்.

இதைவிட இன்றைய காலகட்டத்தில் 2020ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைகள் 2021ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என அரசாங்கத்தால் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சாதாரண தர மாணவர்களின் கல்வி நிலையை நோக்கினால் இறுதியாக பங்குனி மாதமளவில் பாடசாலைகள் மூடப்பட்டதுடன் அவர்களது கல்வி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விட்டது. தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டுவிட்டன. தரம் 11 இற்குரிய பெரும்பாலான பாடங்கள் கற்பிக்கப்படாமலேயே காணப்படுகின்றன. அத்துடன் எந்தப் பாடப் பரப்புகளிலிருந்து பரீட்சைத் தாளில் காணப்படும் என்பதே குழப்பநிலையில் தான் உள்ளது. தரம் 11 இற்குரிய பெரும்பான்மையான பாடங்கள் கற்பிக்கப்படாமையால் வினாக்கள் தரம் 9,10 பாடத்



திட்டங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன என்ற கருத்தும் மாணவர்களிடையே நிலவி வருகின்றது. எனவே இது தொடர்பாக தெளிவான விளக்கம் பொறுப்பான அதிகாரிகளால் வெளியிடப்பட வேண்டியது அவசியமானதாகும். அதேபோன்று ஒரு வழியாக 2020 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. உயர்தரப் பரீட்சையும் நடைபெற்று விட்டது. மாணவர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் பாடங்கள் பூர்த்தியற்ற நிலை கடந்த கால வினாக்கள் பற்றிய தெளிவின்மை எனப் பல பிரச்சினை களுடன் பரீட்சையை எழுதி முடித்து விட்டார்கள். இந்த நிலையில் 2021ஆம் ஆண்டுக்குரிய உயர்தர மாணவர்களின் நிலை 2020ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் நிலையுடன் ஒப்பிடும்போது பன்மடங்கு கவலைக்குரிய விடயமே. பாடசாலைகளில் 2ஆம் தவணைப் பரீட்சைகள் மாத்திரமே நடத்தப்பட்ட நிலையில், கொரோனா காரணமாக பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டு உள்ளன. க.பொ.த. உயர்தரம் என்பது இலங்கையில் ஒவ்வொரு மாணவர்களினதும் எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய ஒரு போட்டிப் பரீட்சையாகும். இப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றும் போது எல்லா மாணவர்களினதும் கல்விச் சமத்துவத்தைப் பேண வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்று குறிப்பிட்ட சில மாகாணங்கள், மாவட்டங்களில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவில்லை. அதேபோன்று zoom இனூடான கற்கை நெறி பல பின்தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு கிடைப்ப தில்லை. இந்தநிலையில் எவ்வாறு மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பரீட்சை ஒன்றை நடத்துவது என்பது தொடர்பில் அரசாங்கம் தகுந்த சரியான முடிவு ஒன்றை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

மாணவர்களின் கருத்துக்களையும் ஆசிரியர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து அவர்களது தேவைகள், இன்னல்களை முறையாக ஆராய்ந்து சிறந்த முடிவொன்றை எடுக்கும்போது சிறந்த முறையான கல்விச் சமத்துவத்தை இலங்கையிலுள்ள மாணவர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் மாணவர்களுடைய கல்வி நிலையில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்களால் முடிந்த பங்களிப்பை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அத்துடன் ஒவ்வொரு மாணவர்களும் தங்களால் முடிந்தவரை தங்கள் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டியது அவர்களது கடமையாகும். கல்வி என்பது வெறுமனே பரீட்சைக்காக மட்டுமன்றி, ஒருவரது அறிவுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான ஒன்று என்பதனால் தமது நேரத்தை பயனுள்ள விதத்தில் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் செலவிட முடியும். சிறந்த மாணவர்களால் சிறந்த ஒரு எதிர்காலத்தை தம்முடைய முயற்சி மூலம் உருவாக்க முடியும்.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 20.06.1962
மறைவு 24.01.2021

எமது பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள இராமநாதன் வீதி ஞானக்குழந்தை இல்லத்தில் ஆசிரியராக பணிபுரியும் திருமதி நீலரஞ்சினி அவர்களின் அன்புக் கணவர்

அமரர்
சின்னையா வசந்தகுமார்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்சாந்தி

பாலர் கல்விக்கழகம்
ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகத்தினர்.

# சங்கானை சந்தையில் வியாபாரிகள் கவனவீர்ப்பு !

யாழ்ப்பாணம், ஜன. 26
சங்கானைப் பொதுச்சந்தையில் 10 அடிகளில் 5 வியாபாரிகள் தொழில்செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியா பாரிகளால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத் தப்பட்டது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட வியா பாரிகள் தெரிவித்ததாவது:
சமூக இடைவெளி என்கின்ற பெயரில் எமது கடைகள் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாங்கள் முதல் 120 அடிகள் கொண்ட கட்டடத்தி லேயே வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஆனால் தற் போது வெறும் 60 அடிகள் கொண்ட கட்டடத்துக்கே இடம்மாற்றப்பட் டுள்ளோம்.
120 அடிக்ள் கொண்ட கட்டடத்தில் இல்லாத சமூக இடைவெளி 60 அடி களைக் கொண்ட கட்டடத்தில் எப்படி வரும். அத்துடன் 10 அடிகள் சதுரப் பரப்பில் 5 கடைகள் என்கின்ற ரீதியில் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட புதிய கட்டடத்துக்கு கிருமி நாசினிகள் விசிறப்படவும் இல்லை. புதிதாக வழங் கப்பட்ட கட்டடத்துக்கு நாங்கள் சென் றால் எங்களது வியாபார நடவடிக்கை கள் வீழ்ச்சியடைந்து வாழ்வாதார பாதிப்பு ஏற்படும். இது ஒரு தனிப்பட்ட பகை காரணமாக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கை போலவே எமக்கு தெரிகின்றது என்றனர்.
(ம27)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 04 . 1951 — மறைவு 21 . 01 . 2021

### திரு செல்வராஜா இராசையா (பேபி)

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட திரு செல்வராஜா இராசையா கடந்த (21.01.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், விமலாவின் அன்புக் கணவரும், காயத்திரி, கஜேந்தினி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராஜா (அப்பி- பிரான்ஸ்), சுசீலா (இலங்கை), காலஞ்சென்ற தவராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை Chambre Funerire des Joncherolles VILLETAANEUSE, 95, rue Marcel Sembat - 93430 VILLETANEUSE இல் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 112 7614 — தகவல்: மருமகன்

## காணவில்லை

### திரு. பொன்னம்பலம் ஸ்ரீகாந்தராஜா



கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிட மாகவும், பூநகரியை பிறப்பிடமாகவும் கொண்டவர். கடந்த 19.01.2021 அன்று யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர் 22.01.2021 அன்று காலை முதல் காணாமல் போயுள்ளார்.

காண்பவர்கள்: திருமதி ஸ்ரீகந்தராஜா செல்வநிதி மனைவி 077 291 6188 தகவல் தரவும்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல/திகதி :- J/1594- 11.03.1972

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளிற்கும்
அன்புடையீர்கள் !

மேற்படி விசேட பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 27.01.2021ம் திகதி இடம்பெறமாட்டாது. இவ் விசேட பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்-தரப்படும்.

நன்றி
25.01.2021


பா.புவனராஜ்
செயலாளர்
(சாவ.ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்)

## காணி விற்பனைக்கு

ஆணைக்கோட்டை முருகமூர்த்தி வீதியில் 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 421 3305, 077 457 3580

## மரண அறிவித்தல்



### லயன் சபாபதிபிள்ளை சுப்பிரமணியம்

சமாதான நீதவான்
(ADA ஓய்வுபெற்ற உதவி விவசாய பணிப்பாளர்)

தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் சுப்பிரமணியம் நேற்று (25.01.2021) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆனந்த நடராஜா மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் பாசமிகு அண்ணனும், காலஞ்சென்ற தேவநாயகியின் அன்புத் தம்பியும், சுஜந்தினி, சுஜந்தன், கஜந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரதாஸ், சிவாஜினி, சுதர்சினி, நாமலி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷாந், நிஷாந், சுஜீவினி, சுஜீவன், சஜீவன், விதீஷன், தஸ்வின், அஜானா, வினிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாபாபனை,
ஆத்தியடி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி சுப்பிரமணியம் கனகேஸ்வரி

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் கனகேஸ்வரி நேற்று (25.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி இலட்சுமியின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கோபாலகிருஸ்ணன், கணேசலிங்கம், யோகலிங்கம், விஜயராணி (நோர்வே), கோடீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சித்திராதேவி, நந்தினி, தர்மினி, சிவபாஸ்கரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவி, கண்ணன், (பிருந்தா- சக்தி) பிரியா, தீபன், துர்க்கா, வனு, சர்மிலன், கனு, சாய்மிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கிருஷிகனின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சண்முகராஜா, இரத்தினம் மற்றும் தர்மலிங்கம், கந்தசாமி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு நொச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

## வாகன சாரதி தேவை
**(DRIVER-LIGHT VEHICLE)**

1) வயது :- 30-35
2) அனுபவம் :- ஆகக்குறைந்தது 3 வருடம்
3) வதிவிடம். கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
4) யாழ் மாவட்டத்திற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

நேர்முகத்தேர்வு:-28.01.2021 வியாழக்கிழமை
காலை 10.00 - 2.30 வரை

தொடர்புகளுக்கு: **MALBA ROPES (PVT) LTD,**
**212, Hospital Road, Jaffna.**
**021 222 0090**
**(kandee7030@gmail**

## மணமகன் தேவை
(1) இந்து கௌரவக் குடும்பம் 1990 M.B.B.S டொக்டர்
(2) 1992 பட்டதாரி B.E வெளிநாட்டு மணமகள் தேவை. இருவருக்கும் செவ்வாய் தோஷம் இல்லை தொழில் வழங்கும் மணமகளும் தொடர்புகொள்ளலாம்.


074 172 3158

## நாஹா மருத்துவ நிலையம்
தீர்க்கமுடியாத எலும்புகள் பாதிப்படைந்த வாதம். அல்சரின் தீவிர பாதிப்பு. பாரிசவாதம்.முழங்கால் வாதம்.பெண்ணியல் நோய். புண்கள் குழந்தையின்மை சிறப்புமருந்தியல்

T.P: **077 321 2740**

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 . 07 . 1942

மறைவு 27 . 12 . 2020

### அமரர் ஐயாத்துரை வரதராஜா BA. Dip in Edu
**(ஓய்வுபெற்ற அதிபர் - SLPS I உசன் இராமநாதன் ம.வி)**

அல்வாயை பிறப்பிடமாகவும் எழுதுவட்டுவாளை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஐயாத்துரை வரதராஜா அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார். உறவினர். நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மேலும் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும். மரணச் சடங்கன்று இரங்கல் உரை வழங்கியவர்களுக்கும். நினைவு மலருக்கு ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**'ராஜஸ்தான்'**
**கண்டி வீதி, எழுதுமட்டுவாள் தெற்கு.**

**குடும்பத்தினர்.**
**077 469 1699**

## மரண அறிவித்தல்



தோற்றம் . 19 . 06 . 1944

மறைவு 20 . 01 . 2021

### திரு. அருளம்பலம் சண்முகலிங்கம்
(ஓய்வுபெற்ற மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சண்முகலிங்கம் கடந்த 20.01.2021 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - யோகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும். காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கலட்சுமி தம்பதியரின் மருமகனும். இராசலட்சுமியின் (சந்திரா) அன்புக் கணவரும். ஜசி. காலஞ்சென்றவர்களான கவிதா. கனிதா மற்றும் நவநீதன். ஜயநிதி (ஜீனா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். முரளிராஜியின் மாமனும். கமலாதேவி. மகேந்திராதேவி. தர்மகுலதேவி. ஶ்ரீராஜலிங்கம் ஆகியோரின் சகோதரரும். காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் பத்மலெட்சுமி (பத்மா). தியாகலிங்கம். மோகனதாஸ். கணேசா ஆகியோரின் மைத்துனரும். றாயன். ஒலிவியா. டிலன். லியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2021) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**160/1, கண்டி வீதி (மாம்பழம் சந்தி),**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மருமக்கள்.**

தொடர்பு: **சந்திரா (மனைவி** - +440 790 454 6424 லண்டன்)
**தர்மகுலதேவி** - 077 675 2806
**மகேந்திரதேவி** - 077 600 6454

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
### ஏல விற்பனை - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

| தொடர் இலக்கம் | விபரம் | இடம் |
|---|---|---|
| 01 | கட்டட நிர்மாணிப்பின் போது அகற்றப்பட்ட பழைய கல்லுடன் சேர்ந்த மண் -120 கியூப் | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை |

மேற்படி ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறையில் கட்டட நிர்மாணிப்பின் போது அகற்றப்பட்ட பழைய கல்லுடன் சேர்ந்த மண் - 120 கியூப் 29.01.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் ஏல விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 07 . 1952

இறப்பு 24 . 01 . 2021

### திருமதி மரியராஜா திரேசா இமெல்டா (லீலா)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 814/1. ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியராஜா திரேசா இமெல்டா (லீலா) நேற்றுமுன்தினம் (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை யோசவ் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். மரியராஜாவின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற மரியதாசன் - மேரி அஞ்சலாவின் அன்புச் சகோதரியும். அனற் சர்மிலா. அனற் சாமிலா ஆகியோரின் அன்புத் தாயும், அன்றூ கிறேசியன் யோய் மெக்சன் (விநோத்) ஆகியோரின் அன்பு மாமியும். ஜோன் கனிஸ்ரன், கீரத்திகா, கம்ஸ்சிகா, சவ்றினா. திவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். ஜெகு. அஞ்சலோ. படியுலா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சஞ்சுவான் ஆலயத்தில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**178/7, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
077 610 6779

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 06 . 1934

இறப்பு 24 . 01 . 2021

### திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி

அராலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி இராசரத்தினம் நேற்றுமுன்தினம் (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, நாகரத்தினம், அருழம்பலம், தையல் நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும். தணிகைநாதன். செந்தில்நாதன், அருணகிரிநாதன், அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும். மீரா, விமலாதேவி, விஜயலக்சுமி. திருஞானம் ஆகியோரின் அன்பு மாமியும். அனுசா, ஐங்கரன், அருண், திகர்ணன், தியாணி ஆகியோரின் பேர்த்தியும். அர்ச்சுன், அயன், ஆரியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**393/30, கோயில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**இ.தணிகைநாதன் (மகன்)**

# நினைவலைகள்

## 8 ஆம் ஆண்டு

தோற்றம்
06.12.1931



மறைவு
31.10.2012

### அமரர் சங்கிலியன் இராமன்

திதி: துதியை (தேய்பிறை)

## 1 ஆம் ஆண்டு

தோற்றம்
01.02.1936



மறைவு
07.02.2020

### அமரர் இராமன் சின்னம்மா

திதி: திரியோதசி (வளர்பிறை)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து
அயராது உழைத்து
எம்மை அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
நல்வழி நடத்தி கல்வியறிவூட்டி மேன்மைபெற
வைத்து வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

**குறிப்பு:** தற்போதைய **கொரோனா** சூழ்நிலை காரணமாக வீட்டில் நிகழும் மதியபோசன நிகழ்விற்கு அனைவரையும் அழைக்கமுடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# நினைவஞ்சலி

## 1 ஆம் ஆண்டு

பிறப்பு
29 . 03 . 1944



இறப்பு
06 . 02 . 2020

### அமரர் தம்பிப்பிள்ளை மகேஸ்வரி

யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பெருமாள் கோவிலடி யாழ்பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மகேஸ்வரி அவர்களின் 1 ம் ஆண்டு நினைவஞ்சலி.



பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய்
மலர்ந்த எம் அருமைத் தாயே!

எல்லோர் மனதிலும்
என்றும் அணையாத சுடராய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் - அம்மா!

அம்மா என்பது ஓர் அமுதமொழி
அதை சொன்னால் தீரும் எம் எல்லா வலியும்
அம்மா என்பது ஓர் அருமருந்து

நீங்கள் காட்டிய அன்பும்,
அரவணைப்பும் என்றும் மறக்காது
உங்கள் நினைவுகளோடு என்றும் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்!

யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

## 1 ஆம் ஆண்டு

பிறப்பு
29 . 03 . 1949



இறப்பு
09 . 10 . 2019

### அமரர் கந்தையா புவனேஸ்வரி

யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பெருமாள் கோவிலடி யாழ்பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கந்தையா புவனேஸ்வரி அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி.

ஓராண்டு என்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்! ஆறாது எம் துயரம்
எழுந்தோடி வந்து எங்கள்
துயர் துடைக்க மாட்டாயோ?
அணையா தீபம் அணைந்ததேனோ? எங்கள்
அன்புச் செல்வம் மறைந்ததேனோ?
பாசமுள்ள சகோதரியே எம்மை
பரிதவிக்க விட்டு பறந்து நீ சென்றதும் ஏனோ?
கதறி அழுகிறோம், கலங்கித் துடிக்கிறோம்
கண் காணாமல் மறைந்து விட்டாயோ?
நாம் பிறக்கும் ஏழு பிறப்பிலும் நீயே
எமக்கு சகோதரியாக வேண்டுமென
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!



யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்



## ஸ்ரீ நாகபூஷனி அம்மன் கோயில் நயினாதீவு

### தைப்பூச விழா- 28.01.2021

நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷனி அம்மன் கோயிலில் "தைப்பூச விழா" 2021.01.28 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று வழமைபோல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், அம்பாளுக்கு
மு.ப 9.30 மணிக்கு - 108 சங்காபிஷேகம்
நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக்கால பூசை
பி.ப 12.15 மணிக்கு - விசேட வசந்த மண்டப பூசை
பி.ப 01.00 மணிக்கு - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்.

கொரோனா (கோவிட்-19) தொற்று காரணமாக வழிபாடுகளில் கலந்து கொள்ளும் அடியவர்கள் யாவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அறங்காவலர் சபை
ஸ்ரீநாகபூஷனி அம்மன் கோயில்
நயினாதீவு.



## ஏழாலை தெற்கு களபாவோடை
## ஸ்ரீ வசந்த நாகபூசனி அம்பாள் தேவஸ்தானம்

- **சப்பறதிருவிழா** இன்று (26.01.2021) செவ்வாய்க் கிழமை இரவு 8.00 மணிக்கும்
- **தேர்த்திருவிழா** நாளை (27.01.2021) புதனகிழமை இரவு 8.00 மணிக்கு
- **தீர்த்தத்திருவிழா** நாளைமறுதினம் (28.01.2021) வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு.

**ஓம் தொலைக்காட்சி ஊடாகவும்**
Sivantv.com **ஊடாகவும்** பார்வையிடமுடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகி

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டம் பெப். 2

கொடிகாமம், ஜன. 26
யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பெப்ரவரி 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ் மாவட்டச் செயலர் கணபதிபிள்ளை மகேசன் ஆகியவர்களின் இணைப் பங்கேற்புடனும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-159)

## 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 10 . 1961



மறைவு 27 . 12 . 2020

அமரர்
### திரு. ஜெராட் ஜோசப் (றெஜி)

கடந்த 27.12.2020 அன்று இறைபதமடைந்த அமரர் திரு. ஜெராட் ஜோசப் (றெஜி) அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும், சமூக வலைத் தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், Banner வைத்து அஞ்சலி செலுத்திய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், 1990 / 1991 கல்வியாண்டு கலை, முகாமைத்துவ பீட யாழ் பல்கலைக்கழக நண்பர்கள், மாணவர்கள், அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.28, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்
ஒரு சதுர அடி - 45 ரூபாய்
தொடர்பு: 077 334 1281

**உடனடி வேலை வாய்ப்பு**
யாழ் நகரப் பகுதியில் இயங்கும் தங்கநகை அடகுச்சேவை நிலையத்திற்கு A/L படித்த கணினி அறிவுள்ள பெண் பணியாளர் தேவை.
தொடர்பு: 077 784 0379

**IELTS வகுப்புக்கள் (2nd batch)**
Spoken with Grammar.
Civic English Medium- Grade 8 & 7
சிவகுரு லேன் Brown Road
Contact 077 798 9830

## யா/கைதடி
## விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விவரம்




**செல்வி சன்கிகா குகேந்திரராசா**
**புள்ளி - 183**




**செல்வன் தாயரூபன் சண்முகேஷ்**
**புள்ளி - 172**




**செல்வன் செல்வரத்தினம் மதுஷன்**
**புள்ளி - 170**




**செல்வி கனிஸ்ரா கிருஸ்ணானந்தன்**
**புள்ளி - 167**




**செல்வி பிரசாளினி பிரதீபன்**
**புள்ளி - 161**

இந்த மாணவர்களை வாழ்த்துவதோடு இவர்களைக் கற்பித்த **ஆசிரியர் - செல்வி தர்ஷனி தம்பையா** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**


# P.P.T நிறுவனத்தின் விசேட சலுகை



ups sky cargo solutions DHL

உள்நாட்டு / வெளிநாட்டு பார்சல் சேவை
UK 1000/-

300க்கு மேற்பட்ட நாடுகளுக்கான **வெளிநாட்டு** பார்சல் சேவை நடைபெறுகிறது.
நிபந்தனைக்கு உட்பட்டது.

**A/C 1000/-**
பருத்தித்துறை/நெல்லியடி
யாழ்ப்பாணம்-கொழும்பு

**Non A/C 900/-**
பண்டத்தரிப்பு/சித்தங்கேணி
சங்கானை/மானிப்பாய்
யாழ்ப்பாணம்-கொழும்பு.

| யாழ்ப்பாணம் | புறக்கோட்டை | வெள்ளவத்தை |
|---|---|---|
| 0764408947 | 0764408954 | 0764408951 |
| 0775731318 | 0112320336 | 0775755175 |

# ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக பொன்சேகா

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பின் பிரகாரம் கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவும், தவிசாளராக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பின் பிரகாரம் முதலாவது செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.
அதில் கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவை ஏற்றுக்கொள்வதற்கு செயற்குழு அனுமதி வழங்கியது. முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு தவிசாளர் பதவியை வழங்குவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை, சம்பிக்க ரணவக்க, கபீர் ஹாசீம், லக்ஷ்மன் கிரியல்ல, ரவிசமரவீர, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன ஆகியோர் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
கட்சியின் பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவும், பிரதிப் செயலாளராக நளின் பண்டாரவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு பொருளாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஹரின் பெர்னான்டோ, அஜித் பி. பெரேரா ஆகியோரிடமும் முக்கிய பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ளன. (எ-44)

### வடக்கில்..

சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள தொழில்நுட்பப் பீட மாணவர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
மன்னாரில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா வைத்தியாசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் ஆயுள்வேத மருத்துவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

### சர்வதேச...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
கடந்த காலப் போர்க்குற்ற மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மீள ஆராய்கின்றோம் என்று சர்வதேசத்தை ஏமாற்று வகையில் புதிய ஆணைக்குழுவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நியமித்துள்ளார்.
அரசின் இந்த ஏமாற்று நாடகத்தைப் பார்க்க சர்வதேசம் ஒருபோதும் தயாராக இல்லை.
ஐ.நாவின் பிடியிலிருந்து இலங்கையை நல்லாட்சி அரசு காப்பாற்றியது. ஆனால், இலங்கையை இன்று ஐ.நாவின் வலையில் சிக்கவைத்துள்ளது கோத்தாபய அரசு.
இலங்கையில் 69 லட்சம் மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறினோம் என்று தம்பட்டம் அடித்த கோத்தாபய அரசு, அந்த மக்களால் வீட்டுக்குத் துரத்தியடிக்கப்படும் காலம் நெருங்கி வருகின்றது.
போலியான வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசு, இன்று அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் திக்குமுக்காடுகின்றது.
நாட்டின் நலன் கருதி சர்வதேசத்தின் உறவைப் பேணிக்காத்து நல்ல வேலைத் திட்டங்களை நாம் அன்று முன்னெடுத்தோம். ஆனால், இந்த அரசோ எந்தவித வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியாமல் சிக்கித் தவிக்கின்றது.
கொரோனாவின் மூன்றாம் அலை நாட்டைத் தாக்கியபோது, நாட்டை முழுமையாக முடக்காமல் அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த அரசே கொரோனாவைப் பரப்பியது. இன்று அமைச்சர்களையும் கொரோனா விட்டு வைக்கவில்லை.
சிங்களவர்களின் மனதில் இடத்தைப் பிடிக்கும் நோக்குடன் தமிழ், முஸ்லிம்களின் மத, கலாசார, பண்பாட்டு உரிமைகளில் இந்த அரசு கைவைத்துள்ளது. கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு முஸ்லிம் மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அதேபோன்று போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்துவதற்குத் தமிழ் மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. என்றார். (எ-22)

### வீதியால்...

றுள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் அணிந்திருந்த 4 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.
இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்று வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-110)

### கொரோனா...

செய்யப்பட்டுள்ளது என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் விளக்கியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள முன்னணித் தொழிலாளர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படும் எனவும், தடுப்பூசி வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இந்தியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குத் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு கொழும்பில் சேமித்து வைக்கப்படவுள்ளன.
அதன்பின்னர் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவின் கீழ் உள்ள பணிக்குழு தடுப்பூசியை வழங்குவதற்கான நிலையங்களுக்குக் கொண்டு செல்வது மற்றும் சேமிப்பது தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கையாளும்.
தடுப்பூசிகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஏதுவான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறான இடங்களுக்குத் தேவையானோர் வரவழைக்கப்பட்டு அந்த இடங்களிலேயே தடுப்பூசி வழங்கப்படும். மாறாக ஒவ்வொரு இடங்களுக்கும் எடுத்துச் சென்று தடுப்பூசி வழங்கப்படமாட்டாது-என்றார். (எ-22)

### கோத்தாபய....

அவர் மேலும் தெரிவித்ததாவது-
மிகப் பெரிய பல பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அதனால், அரசை விமர்சிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.
அரசை விமர்சிக்க வேண்டாம் எனக் கூற எவருக்கும் உரிமையில்லை. மக்கள் தான் அரசைத் தெரிவு செய்கின்றனர். எனவே, அரசை விமர்சிக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு-என்றார். (எ-22)

### வேலணை...

இந்த இடமாற்றம் தொடர்பான அறிவித்தல் நேற்று மாலை வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் கடந்த ஒரு மாத காலமாக நடந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மண்டைதீவு பகுதியில் கடற்படையினருக்கு காணி சுவீகரிக்கும் செயற்பாடுகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மக்கள் எதிர்ப்பால் அந்த முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு வேலணை பிரதேச செயலர் கடிதம் ஒன்று அனுப்பியிருந்தார்.
தனியார் காணிகளை பாதுகாப்புத் தரப்புக்காகக் சுவீகரிக்கும் முயற்சிகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்ற விடயத்தை அதில் அவர் சுட்டிக்காட்டியிருந்தார் என்று தெரிகின்றது.
இந்தநிலைமையில் பிரதேச செயலாளருக்குத் திடீரென இடமாற்ற உத்தரவு வந்துள்ளது. (எ)

### விபத்தில்..

கடந்த 23ஆம் திகதி திருமண வீடொன்றுக்குச் செல்வதற்காக சென்றுள்ளார். தனது வீட்டுக்கு அருகே வீதியைக் கடக்க முயன்றபோது மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதியது. முதியவர் உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-25)

### மூதாட்டி....

அரியதாஸ் பங்கசராணி (வயது-62) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த 21ஆம் திகதி பஸ்ஸில் ஊறணி வைத்தியசாலைக்கு மூதாட்டி வந்துள்ளார். அவர் அங்கு வீதியைக் கடக்க முயன்றபோது மோட்டார் சைக்கிள் மோதிப் படுகாயமடைந்தார். அவர் ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
அவர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-25)

### வயலுக்கு...

ள்ளார். கைவிரல் ஒன்று முறிந்த நிலையிலும் காலிலும், கையிலும் கரடியின் கடிகாயங்களுக்கு உள்ளான நிலையிலும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.
மன்னாகண்டல் பகுதியில் வயல் விதைத்துள்ள இவர், அதைப் பார்வையிட நண்பருடன் சென்றுவிட்டு திரும்பியபோது, காட்டுப்பகுதியில் வைத்துக் கரடி தாக்கியுள்ளது.
நண்பரின் உதவியுடன் வயல்பகுதியில் இருந்து வெளியேறி புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
அண்மையில் பெய்த மழையால் காட்டில் வெள்ள நிலைமை காணப்படுகின்றது. அதனால் காட்டு விலங்குகள் மேட்டு நிலங்கள் நோக்கி நகர ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. புதுக்குடியிருப்பு காட்டுப் பகுதியில் கரடி உள்ளது என்று கூறப்பட்டு வந்தாலும், தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (எ-19)

### கொரோனா...

ந்துள்ளனர்.
நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 287 ஆக அதிகரித்துள்ளது.
இவர்களில் 274 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)

### புதன்கிழமை....

போராட்டம் இடம்பெறவுள்ளது என்று யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.
நீண்ட காலமாக இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டின் காரணமாக வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த நிலையில் மீனவர்களின் அத்துமீறலை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாண நகரில் நாளை புதன்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
யாழ் பண்ணை சுற்று வட்டத்தில் இருந்து ஆரம்பித்து கடற்தொழில் அமைச்சு, இந்திய துணை தூதரகம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு பேரணியாகச் சென்று தமது பிரச்சினை தொடர்பில் மனுக்கையளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-26)

### ஐ.நா.....

வொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
கொரோனா காரணமாக உயிரிழந்தவர்களைக் கட்டாயமாக எரிக்கும் நடைமுறை உட்பட இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் பிரிட்டன் அவதானமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, பிரிட்டனின் பொதுநலவாய, அபிவிருத்தி விவகார அமைச்சர் தாரிக் அஹ்மட் இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை முன்னிட்டு, கொரோனாத் தொற்றால் உயிரிழந்த மதக் குழுக்களின் உடல்களைக் கட்டாய எரிப்புக்கு உட்படுத்துவதன் தாக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹ்மட் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலளிப்பதற்கு இந்த மாதம் 27 ஆம் திகதிவரை கால வரையறை வழங்கப்பட்டுள்ளது. (எ-22)













# ஜி.பி.சி.எல் கிண்ணத் தொடர் சனிக்கிழமை ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், ஜன. 26

ஞானம்ஸ் பெயின்ற் நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்படும் ஜி.பி.சி.எல் கிண்ணத்துக்கான இந்த வருடத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரில் 10 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. ஏ, பி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தொடர் நடத்தப்படவுள்ளது. பி பிரிவில் அக்கிரசிவ் போய்ஸ், கொக்குவில் ஸ்ரார்ஸ், நோர்த் கொன்கியூரர்ஸ், ஜப்னா பந்தேர்ஸ், நல்லூர் புரோன்கொஸ் அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தத் தொடர் 28ஆம் திகதி ஆரம்பமாகும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் திகதி மாற்றம் செய்யப்பட்டு 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




# வழித்துத் துடைத்தது இங்கிலாந்து



காலி, ஜன. 26

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இங்கிலாந்து அணி.


கடந்த 22ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 381 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 344 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக நேற்றைய தினம் களமிறங்கிய இலங்கை அணி 126 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணியின் முன் வரிசை வீரர்கள் எவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ஒருவர் பின்னர் ஒருவராகப் பவிலியனுக்குச் சென்றுகொண்டிருந்தனர். 10ஆம் நிலை வீரரான எம்புல்தெனிய கடைசிக்கட்டத்தில் அதிரடி காட்டினார். அவர் 40 ஓட்டங்களைச் சேர்த்தார். இதுவே இலங்கை அணியின் சார்பாகக் குவிக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களாகும். முடிவில் 126 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் பெஸ், லீச் இருவரும் தலா 4 இலக்குகளையும், ரூட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணிக்கு 164 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி ஆரம்ப வீரரான சிப்லி மற்றும் மத்திய வரிசை வீரரான பட்லர் ஆகியோரின் உதவுடன் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. சிப்லி 56 ஓட்டங்களுடனும், பட்லர் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் ரூட் தெரிவானார். (ம)



**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராச வீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை. 2 பரப் பாக பிரித்து கொடுக்கப்படும்.**

தொடர்பு - குரு
077 8051 655
077 5963 845

**கட்டடம் வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரசந்திக்கு அருகாமையில் 2ம் தளத்தில் மூன்று கடைகள், 3ம் தளத்தில் மூன்று கடைகளும். தனியார் கல்வி நிலையங்களுக்கும், களஞ்சிய சாலையாக பயன்படுத்துவதற்கும் சகல வசதிகளும் கொண்ட உகந்த இடம்.

தொடர்பு - குரு
076 2212037

**வேலைக்கு ஆண்கள் தேவை**

யாழ்ப்பாணம் 26/1, செம்மா தெருவில் 01.01.2021 முதல் இயங்கிவரும் சரவணபவன் பான்சி கவுஸ் மொத்த சில்லறை பான்சி வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள் சில்வர் பாத்திரங்கள், பட்டின் வகைகள் விற்பனை நிலையத்திற்கு தகுதியுடைய ஆண்கள் தேவை. (19 வயது தொடக்கம் 25 வயதுவரை விரும்பத்தக்கது)

உரிமையாளர்- கரன்
077 468 3354



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.